வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu







Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 10.07.2024 புதன்கிழமை இதழ் : 192 பக்கங்கள் : 12

# நாட்டை மீண்டும் பின்நோக்கி இழுப்பதற்கு சிலர் சதி முயற்சி

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 10

நாடு வீழ்ந்தபோது சவாலை ஏற்காது தப்பியோடிய தலைவர்கள், மீண்டெழுந்துவரும் நாட்டை மறுபடியும் பின்நோக்கி இழுப்பதற்கு முற்படுகின்றனர் - என்று பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

இருண்ட யுகத்திலிருந்தே தற்போது முன்னோக்கி வந்துகொண்டிருக்கின்றோம். உயிர்கள் மற்றும் சொத்துகளுக்கு சேதம் விளைவித்து, சட்டத்தை கையிலெடுத்து செயல்பட்ட வன்முறைக்குழு தோல்வியடைந்து, ஜனநாயகத்தை மதிக்கும் சமூகம் உருவாகி வருகின்றது.

அன்று நாடு வீழ்ச்சியடைந்தபோது அதனை பொறுப்பேற்க முடியாது எனக் கூறிய தரப்பு அதே போல சவால்களுக்கு மத்தியில் தப்பியோடிய தலைவர்கள் தற்போது மீண்டும் களத்துக்கு வந்து பல்வேறு நகைச்சுவை கதைகளைக் கூறிவருகின்றனர். தாம் தோல்வியடைவோம் என்பது அவர்களுக்கு தெரியும். எனினும், நாடு மீண்டெழ முடியாத வகையில் பின்நோக்கி இழுப்பதற்கு முற்படுகின்றனர்.

விமர்சனங்களை மட்டுமே முன்வைப்பதற்கு பழகியுள்ள வாய்ச்சொல் தலைவர்களால் நாட்டை மீட்க முடியுமா? முடியாது. சொல்லைவிட செயலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தலைவரே தற்போது தேவை.

11

# இந்தியத் தூதுவரை சந்தித்த அநுரகுமார

கொழும்பு, ஜூலை 10

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க, இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவுடன் கொழும்பில் பேச்சு நடத்தினார்.

அநுரகுமார திஸநாயக்கவின் அரசியல் பிரசாரம் மற்றும் இலங்கையில் தேர்தல் போக்குகள் குறித்து தூதுவருடன் கலந்துரையாடியதாக கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

பல்வேறு இருதரப்பு முயற்சிகள் குறித்து தூதுவர் அநுரகுமார திஸநாயக்கவிடம் விளக்கமளித்தார். (அ)

# 2025 பட்ஜெட் யோசனை தயாரிக்கும் பணி விரைவில்

கொழும்பு, ஜூலை 10

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட யோசனையை தயாரிக்கும் நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக அரச நிறுவனங்களின் வரவு - செலவு அறிக்கைகளை கோர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய மதிப்பீட்டு அறிக்கைகளை கோரும் நடவடிக்கைகளும் அதே சந்தர்ப்பத்தில் முன்னெடுக்கப்படுமென நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# வல்லிபுர ஆலய பிரதம குருக்கள் காலமானார்



வடமராட்சி, ஜூலை 10

வரலாற்று பிரசித்தி பெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய பிரதம குரு

11

## 200 தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு

# அரச சேவைகள் நேற்று முற்றாக ஸ்தம்பித்தன!

கொழும்பு, ஜூலை 10

அரச சேவையைச் சேர்ந்த 200 தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் நேற்றும் சுகயீன விடுமுறையை அறிவித்து, தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அரச சேவையின் நிறைவேற்று அதிகாரிகளுக்காக வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் ரூபாய் விசேட கொடுப்பனவை அனைத்து அரச சேவையாளர்களுக்கும் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டதாக அரச மற்றும் மாகாண அரச சேவை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரச முகாமைத்துவ சேவை,

11

# பொறுப்பற்ற முறையில் செயற்பட்டோர் அனைவருமே தண்டிக்கப்பட வேண்டும்!

## சாவகச்சேரி வைத்தியசாலை குறித்து டக்ளஸ்

கொழும்பு, ஜூலை 10

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வினைத் திறனுடன் இயங்குவதை விரும்பாத சக்திகளே கடந்த சில தினங்களாக அங்கு நிலவிய அசாதாரண சூழலுக்கும், மக்கள் போராட்டத்திற்கும் காரணம் என்று அமைச்சரவையில் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விசாரணைக் குழு அமைக்கப்பட்டு, சீர்கேடுகளுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை

11

# சாவகச்சேரி வைத்தியசாலையின் பிரச்னைக்கு உரிய தீர்வு வேண்டும்

## சபையில் கஜேந்திரன் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 10

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிலவி வரும் பிரச்னைகளுக்கு சுகாதார அமைச்சு உரிய தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து

11

# செல்வம் எம். பியை கூட்டமைப்பின் பாராளுமன்ற குழு தலைவராக்குக!

## ரெலோ கட்சி கோரிக்கை

கொழும்பு, ஜூலை 10

"தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவராக தெரிவு செய்வதற்கு உங்களுடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்."

- என்று இலங்கைத்

11

# தேர்தலில் வெல்ல முடியாதோர் நாட்டை சீர்குலைக்க முயற்சி!

## சாடுகின்றது ஐ. தே.க.

கொழும்பு, ஜூலை 10

தேர்தலில் வெற்றிபெற முடியாத சில தரப்பினர் நாட்டின் ஸ்திர நிலையை சீர்குலைக்கும் வேலைநிறுத்தங்களை ஆரம்பித்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

எந்தெந்தக் குழுக்கள் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றன என்பதை மக்கள் அடையாளம் காண வேண்டும் எனவும், மக்கள் மீண்டும் தவறு செய்தால், அதனை மாற்றியமைக்க முடியாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா நடக்காதா என்ற சந்தேகங்கள் எல்லாவற்றுக்கும் முற்றுப் புள்ளி வைத்தாகிவிட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசியலமைப்பில் செய்யப்பட்ட பத்தொன்பதாவது திருத்தத்தில் இருந்த சின்ன 'ஓட்டை' யைப் பயன்படுத்தி தேர்தலை ஒத்திவைக்கமுடியுமா என்று யோசித்திருந்தார்.

மலையை மயிரில் கட்டி இழுத்துப் பார்ப்பதுபோல இழுத்துப் பார்த்தார். வந்தால் மலை, போனால் ..... தானே என்ற முயற்சி அது.

அது முடிந்துவிட்டது. இனி, தேர்தல் ஒன்றுதான் அடுத்த வழி. அதில் வெற்றிபெறுவது எப்படி என்பதையே இனி வேட்பாளர்களாக களம் இறங்க நினைப்பவர்கள் அனைவரும் யோசிக்கத் தொடங்குவார்கள்.

இனி தேர்தல்களம் சூடுபிடிக்கத் தொடங்கும். கட்சித்தாவல்கள் - அதிரடி அறிவிப்புகள் என்று நாடு தேர்தல் ஜூரத்தில் சில மாதங்களை கடக்கவிருக்கின்றது.

நமது கவனம் எல்லாம், தமிழ் மக்கள் யாரை ஆதரிக்கப் போகின்றார்கள், தமிழ் கட்சிகள் வழக்கம் போல தமிழ் மக்களின் மனநிலையை அறிந்து அதற்கு ஏற்றாற்போல யாரை ஆதரிப்பது என்று முடிவெடுக்குமா என்பது போன்ற கேள்விகளே நம் மத்தியில் இனி பேசப்படும்.

ரணில் - சஜித் - அநுர என்ற மும்முனைப்போட்டிக்கு நடுவே, பொதுஜனபெரமுனவும் தனது பங்குக்கு தம்மிக்கவை களம் இறக்கலாம் என்று பேசப்படுகின்றது. அவர் போட்டியிட்டாலும் போட்டி என்னவோ மூவருக்கு இடையில்தான் இருக்கும் என்பதும் நமக்குத் தெரிந்தது தான்.

இவர்கள் மூவருமே இந்த நாட்டின் புரையோடிப்போன இனப்பிரச்னைக்கு என்ன தீர்வை முன்வைக்கிறார்கள் என்பது பற்றி இந்தப் பத்தியில் பல தடவைகள் நாம் பேசியிருக்கின்றோம். தற்போது எதிர்க்கட்சியில் இருக்கும் சஜித் பிரேமதாஸவும் அநுரகுமார திஸநாயக்காவும் இனப்பிரச்னைக்கு தீர்வாக பதின்மூன்றை அமுல்படுத்துவோம் என்று அறிவித்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதையே சொல்கிறார். ஆனால், பொலிஸ் அதிகாரம் இல்லாத மாகாண சபைகளையே தருவேன் என்கிறார். மற்றவர்கள் தருவேன் என்று சொல்வது சரி, அவர் எதற்காக தருவேன் என்று சொல்லவேண்டும்? அவர்தானே கடந்த இரண்டு வருடங்களாக நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்துகொண்டிருக்கிறார். இந்த இரண்டு ஆண்டுகளில் தந்திருக்கலாமே என்று தமிழர் தரப்பிலிருந்து முன்வைக்கப்படும் கேள்வியிலும் நியாயம் இல்லாமல் இல்லை.

அதுவல்ல இன்று நாம் சொல்ல வருவது,

சில தினங்களுக்கு முன்னர் முக்கிய வெளிநாடு ஒன்றின் இராஜதந்திரி ஒருவர் நமது தமிழ் பொதுவேட்பாளர் பற்றி அறிய முயன்றது பற்றி இந்தப் பத்தியில் எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அப்போது, தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம் கடந்த பல வாரங்களாக சிவில் சமூக பிரதிநிதிகள், பொது அமைப்புகள் மட்டத்தில் மட்டுமே பேசப்பட்டு ஒரு பொது உடன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டு தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற அமைப்பு உருவாக்கத்தோடு தொடர்ந்துகொண்டிருந்தது.

பின்னர் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்ற ஐந்து கட்சிக் கூட்டணியுடனும் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, ஐங்கரநேசனின் தமிழ் தேசிய பசுமை கட்சி என்பவற்றுடனும் பொதுச் சபையினர் நடத்திய தொடர் பேச்சுகளின் பயனாக அவர்களும் அதற்கு ஆதரவான முடிவை எடுத்த பின்னர், அதாவது அரசியல் கட்சிகளின் பங்களிப்பு உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அந்த வியடம் சற்று சூடுபிடிக்கத் தொடங்கியது.

தமிழ் மக்கள் பொதுச்சபையும் அரசியல் கட்சிகளும்இணைந்து தமிழ்த் தேசியப் பேரவை என்ற அமைப்பை உருவாக்குவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கடந்த ஆறாம் திகதி கையெழுத்திடுவதற்கும் முடிவாகியிருந்தது.

இந்த நிலையிலேயே தமிழ் அரசு கட்சியின் "பெருந்தலைவர்" சம்பந்தனின் மறைவையொட்டி அந்தக் கையெழுத்திடும் வைபவம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அரசியல் கட்சிகளின் தலைவர்களிடம் அடுத்த திகதிக்ககாக தமிழ் மக்கள் பொதுச் சபையினர் காத்திருக்கின்ற இவ்வேளையில், அந்த ஐந்து கட்சிக் கூட்டணியின் தலைவர்கள் ஐவரும் கொழும்பில் இந்தியத் தூதரகத்தின் அழைப்பை பெற்றிருக்கின்றனர்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை அந்தச் சந்திப்பு நடைபெறவிருக்கின்றது. பெரும்பாலும் இனி அந்தச் சந்திப்பு முடிந்த பின்னரே, பொதுவேட்பாளர் விவகாரம் தொடரும் என்று எதிர்பார்க்கலாம்.

மும்முனைப் போட்டி நடைபெற்றால், யார் வெற்றிபெறுவார்கள் என்பதை கடைசிவரை கணிப்பது கடினமாக இருக்கும் என்பது ஆராய்ச்சிக்குரியது அல்ல. அப்படியொரு நிலைமையில், தமக்கு வேண்டப்படாதவர்கள் ஆட்சிக்கு வந்துவிடுவதை தவிர்க்க நமது பக்கத்து நாடு அதிதீவிரமாக முயன்றுகொண்டிருக்கின்றது என்பதும் ஒன்றும் இரகசியமானது அல்ல. பக்கத்து நாடு மட்டுமல்ல, அமெரிக்காவும்கூட தமது விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்துகொண்டிருக்கின்றது.

அதனால்தான் ரணில் - சஜித் இடையே இணைப்பை ஏற்படுத்தி தமது விருப்பத்துக்குரிய வேட்பாளரின் வெற்றியை உறுதிப்படுத்த அவர்கள் முயன்றுகொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் ஏற்கனவே முடிவுசெய்துவிட்ட அரசியல் கட்சிகளின் கூட்டணியான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை சந்திப்புக்கு அழைத்திருக்கின்றது இந்தியத் தூதரகம். இனி இப்படித்தான், ஒவ்வொரு விடயங்களும் கடைசிவரை என்ன நடக்குமோ என்ற பதற்றத்துடனேயே நகரவிருக்கின்றன.

- ஊர்க்குருவி -

# அஸ்வெசும இரண்டாம் கட்ட கணக்கெடுப்பு ஜூலை 15 முதல்

கொழும்பு, ஜூலை 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய நடைமுறைப்படுத்தப்படும் அஸ்வெசும நலன்புரி நன்மைகள் வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்ட தகவல் கணக்கெடுப்பு பணிகள் ஜூலை 15 முதல் 30 வரை முன்னெடுக்கப்படவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

முதலாம் கட்டத்தில் தகுதி பெற்ற 18 இலட்சத்துக்கும் அதிகமானோரைத் தவிர இரண்டாம் கட்டத்திற்காக 4 இலட்சத்து 50 ஆயிரத்து 924 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் நலன்புரி நன்மைகள் பெறத் தகுதியானவர்களை இனங்காணும் பணிகள் இம்மாதத்திற்குள் நிறைவு செய்யப்படும்.

அஸ்வெசும திட்டத்தின் முதல் கட்டத்திற்கு 18 இலட்சத்து 54 ஆயிரம் பேர் தகுதி பெற்றுள்ளனர். இதற்காக 58.5 பில்லியன் ரூபாய் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியாதவர்கள் அல்லது தவறியவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கஇ நலன்புரி நன்மைகள் சபை சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

மாற்றுத் திறனாளிகள், பாதிக்கப்படக்கூடியவர்கள், வறியவர்கள், மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ள ஏழைகள் ஆகிய 4 சமூகப் பிரிவுகளின் கீழ் அஸ்வெசும நலன்புரி வழங்கப்படுவதோடு ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு வழமை போன்று கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

(அ)

# சட்டவிரோத பிரமிட் திட்ட மோசடியில் சிக்கிய மக்கள்

கொழும்பு, ஜூலை 10

இணையத்தில் வெளியிடப்படும் விளம்பரங்களை பார்த்து அதிக நிதிப் பலன்களை வழங்கப்படுவதாக கூறுப்படும் சட்டவிரோத பிரமிட் திட்டத்தில் இணைந்து நாடளாவிய ரீதியில் பெரும் எண்ணிக்கையானவர்கள் சுமார் 300 கோடி ரூபாயை இழந்துள்ளனரெனத் தெரிய வந்துள்ளது.

ஐம்பதாயிரம் ரூபாய் முதல் பத்து கோடி ரூபாய் வரை வைப்பு செய்து இந்த மோசடியில் சிக்கி மக்கள் பணத்தை இழந்துள்ளனர்.

இந்த பிரமிட் திட்டம் 2015 முதல் செயல்பட்டு வந்துள்ளது. அதன் பிறகு ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரவல் காரணமாக 2019 முதல் செயல்படவில்லை.

அதன்பிறகு, இந்த பிரமிட் திட்டத்தை நடத்தியவர் பணம் முதலீடு செய்தவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தவில்லை, முதலீடு செய்த பணமோ, அதற்கான வட்டிப் பணத்தை கூட வழங்கவில்லையென கூறப்படுகிறது.

இந்த பிரமிட் திட்டம் நாரஹேன்பிட்டி முகவரியில் உள்ள விளம்பர நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்த விளம்பர நிறுவனத்தின் உரிமையாளர் அம்பாந்தோட்டை பிரதேசத்தில் வசிக்கும் அரசியல் தொடர்புகளை கொண்டவரெனவும் தெரியவந்துள்ளது.

இந்த மோசடியில் ஏராளமான பாடசாலை ஆசிரியர்கள், வைத்தியர்கள், வழக்கறிஞர்கள், வணிகர்கள், பொலிஸார், ஆயுதப் படை உறுப்பினர்கள், கிராம அதிகாரிகள் மற்றும் அரசு, தனியார் துறை ஓய்வு பெற்றவர்கள் தங்கள் பணத்தை இழந்துள்ளனர்.

இவ்வாறான நிதி நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாமல் வணிக நிறுவனமாக பதிவு செய்து மக்களை ஏமாற்றி இயங்கி வருவது தெரியவந்துள்ளது.

(அ)

# மோசடியில் ஈடுபட்ட பெண் கைது!

கொழும்பு, ஜூலை 10

அமெரிக்காவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணம் மோசடி செய்த பெண்ணொருவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் வவுனியா பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா - போகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் 10 இலட்சம் ரூபாயை பெற்றுக்கொண்டு மோசடி செய்ததாக, கம்பஹா பிரதேசவாசி ஒருவர் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவில் அண்மையில் முறைப்பாடு செய்திருந்தார்.

சந்தேக நபர் தொடர்பில் பணியகத்துக்கு 5 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில், விசாரணை அதிகாரிகள் குறித்த பெண்ணின் வீட்டுக்குச் சென்று கைது செய்துள்ளனர்.

அத்துடன், முறைப்பாடுகளின் பிரகாரம், பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவின் அதிகாரிகள், கொழும்பு புதுக்கடை நீதிமன்றில் குறித்த பெண்ணுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (அ)

# சம்பள முரண்பாட்டை தீர்க்காமல் இனவாதம் வளர்க்கப்படுகின்றது

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

கொழும்பு, ஜூலை 10

அதிபர், ஆசிரியர் சங்கத்தின் சம்பள முரண்பாட்டை தீர்க்காமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனவாத பிரச்னைகளை முன்னெடுக்கிறார். இதனை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிப்பதாக அந்த சங்கத்தின் உப செயலாளர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும்,ரணில் - ராஜபக்ஷ அரசாங்கம் ஆசிரியர் சங்கத்தின் போராட்டத்தை முடக்கியது. மத்திய வங்கியில் கொள்ளையடித்தவர்களை பாதுகாக்கும் அவர்கள் - அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்க முன்வரவில்லை.

ரணில் விக்கிரமசிங்க எமது போராட்டம் தொடர்பாக தமிழ் பாடசாலைகளில் எவ்வித போராட்டமும் நடைபெறவில்லை என்று கூறினார். இதனை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். எமது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை தொடர்ந்து போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் - என்றார்.

(ஐ-01)

# புதையல் தோண்டிய 7 பேர் கைதாகினர்

கொழும்பு, ஜூலை 10

சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டிய ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

அநுராதபுரம் பிரதேசத்தில் கலென்பிந்துனுவெவ பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் அநுராதபுரத்தை சேர்ந்த 28 - 55 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கலென்பிந்துனுவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
10.07.2024 புதன்கிழமை
குரோதி வருடம், ஆனி 26

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## திருகோணமலை தமிழர் அரசியல்

தமிழரின் அரசியல் எதிர்காலம் பெரும்பாலும் சூனியமாகவே இருக்கின்றது. சிலர் பாராளுமன்றம் செல்வதைத் தவிர பெரிதாக எதுவும் நடந்துவிடப் போவதில்லை போன்றதொரு நிலைமையே காணப்படுகின்றது. இலங்கை தமிழ் அரசு கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தனின் மறைவைத் தொடர்ந்து, அவரின் இடத்துக்கு குகதாசன் நியமிக்கப்பட்டிருக்கின்றார். இரண்டாவது விருப்பு வாக்குகளை பெற்றவர் என்னும் அடிப்படையில் இந்த நியமனம் இடம்பெற்றிருக்கின்றது.

திருகோணமலை ஒரு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடம் - அதேவேளை, நெருக்கடியான இடம். கொழும்பு எப்போதும் திருகோணமலையில் ஒரு கண்ணை வைத்துக் கொண்டிருப்பது வழக்கம். அதேவேளை, திருகோணமலை இந்தியாவின் கரிசனைக்குரிய இடம். பெரும் முதலீட்டு திட்டங்கள் எதிர்காலத்தில் இடம்பெறவுள்ளன. இவ்வாறான திட்டங்களின் நன்மைகள் தமிழ் மக்களுக்கு வந்து சேருமா என்றால் அது கேள்விக்கு உரியதுதான்.

திருகோணமலையின் அரசியல் தலைமைத்துவம் தொடர்பான கரிசனை பல மட்டங்களிலும் வெளிப்படுப்பட்டு வந்திருக்கின்றது. சம்பந்தனுக்கு அடுத்த நிலையில் யார் என்னும் கேள்வியும் அவ்வப்போது கேட்கப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால், சம்பந்தன் இருக்கின்ற காலத்தில் தனக்கு அடுத்த ஒருவர் என்னும் அடிப்படையில் அவர் எப்போதுமே சிந்தித்ததில்லை. அவ்வாறு ஒருவர் பற்றி சிந்தித்தாலும்கூட, அவர் தன்னால் கையாளப்படக்கூடிய ஒருவராக இருக்க வேண்டும் என்னும் பார்வையே அவரிடம் இருந்திருக்கின்றது.

பெரும்பாலும் அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலையின் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும் என்னும் நிலைமையே காணப்பட்டது. கடந்த பொதுத் தேர்தலின்போது, அம்பாறையின் பிரதிநிதித்துவம் இல்லாமல்போனது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்மீதான கடும் அதிருப்தியின் காரணமாகவே அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டது. திருகோணமலையும் இவ்வாறானதொரு நிலையில்தான் இருக்கின்றது.

திருகோணமலையில் சம்பந்தனின் இடத்துக்கு ஒருவர் நியமிக்கப்பட்டதால் அனைத்தும் முடிந்துவிடவில்லை. அடுத்த பாராளுமன்ற தேர்தலில் அனைத்து கட்சிகளும் ஓர் அணியாக, திருகோணமலையில் போட்டியிடாதுவிட்டால் பிரதிநிதித்துவத்தைத் தக்கவைப்பது மிகவும் சவாலாகவே இருக்கும்.

சம்பந்தனின் இடத்துக்கு நியமிக்கப்பட்டிருப்பவர் தேர்தல் ஒன்று நடைபெற்றிருந்தால் வெற்றி பெற்றிருப்பாரா என்பது சந்தேகமே - ஏனெனில், கடந்த பொதுத் தேர்தலில் சம்பந்தன் பெற்ற விருப்பு வாக்குகளில் அரைவாசிக்கும் குறைவான வாக்குகளையே அவர் பெற்றிருந்தார் - அந்த வாக்குகள் கூட, சம்பந்தன் அவரை சுட்டிக் காட்டியதாலேயே கிடைக்கப்பெற்றன. இவ்வாறானதொரு நிலையில், தமிழ் அரசு கட்சி தனித்துப் போட்டியிட்டு, வெற்றிபெறுவது என்பது ஒரு விஷப்பரீட்சையே.

தமிழ் பொது வேட்பாளரை எவ்வாறு தோற்கடிப்பது என்று சிந்திப்பதை விடுத்து இந்த விடயங்கள் தொடர்பிலே கட்சிகள் சிந்திக்க வேண்டும். ஒருவேளை தமிழ் பொது வேட்பாளர் ஓர் எழுச்சிகரமான விடயமாக மாறினால திருகோணமலை மற்றும் அம்பாறை போன்ற மாவட்டங்களின் பிரதிநிதித்துவத்தை தக்கவைப்பதற்கு அது பயன்படக்கூடும்.

# வடமராட்சி பாடசாலைகளிலும் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்பு

வடமராட்சி, ஜூலை 10

அதிபர்கள், ஆசிரியர்களின் சுகயீனப் போராட்டத்தால் வடமராட்சி வலய பாடசாலைகளின் கற்றல் செயல்பாடுகள் முழுமையாக முடங்கின.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்க கோரியும் ரணில் - மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் ஆசிரியர் தொழில்சங்கங்கள் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன.

நேற்றையதினம் வடமராட்சியிலுள்ள பெருமளவான பாசாலைகள் அதிபர், ஆசிரியர்கள் இன்றி வெறிச்சோடி காணப்பட்டன. வாயில் கதவுகளும் மூடப்பட்டிருந்தன.

சிலபாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகைதந்திருந்த போதும் ஆசிரியர்கள் வரவின்மை காரணமாக கற்றல்செயல்பாடுகள் நடைபெறவில்லை.

இதேவேளை, வடமராட்சி கிழக்கிலுள்ள சில பாடசாலைகளில் கற்றல் செயல்பாடுகள் நடைபெற்றன. (ஐ-02)

## உயிரினங்கள் கடத்தல் ஐந்து பேர் படகுடன் கைது

கொழும்பு, ஜூலை 10

நாட்டின் உயிரினங்களை பிடித்து வெளிநாட்டுக்கு கடத்த முயன்ற ஐந்து பேர் மீன் பிடி படகு ஒன்றுடன் 7 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு மற்றும் கொச்சிக்கடை ஆகிய பகுதிகளை சேர்ந்த 34 மற்றும் 67 வயதுடைய ஐந்து பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் மற்றும் கடலோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளால் தென் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணித்த மீன்பிடி படகிலிருந்து 13 மலைப் பாம்புகள், உடும்பு , ஆமை மற்றும் 3 கிளிகள் ஆகியவை மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் காலி துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக ஹிக்கடுவை வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். (ஐ)

## தேர்த் திருவிழா வர்ணனை

யாழ்ப்பாணம், ஜூலை 10

புங்குடுதீவு மேற்கு - 4ஆம் வட்டாரம் - பிட்டியம்பதி காளிகா பரமேஸ்வரி அம்பாள் திருக்கோவில் வருடாந்த தேர்த்திருவிழா நேர்முக வர்ணனை எதிர்வரும் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த வர்ணனையை சைவப் புலவர் பொன். சந்திரவேல் வழங்கவுள்ளார். (ஐ)

## க. பொ.த. உயர்தர பரீட்சை விண்ணப்ப திகதி நீடிப்பு

கொழும்பு, ஜூலை 10

2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர பரீட்சைக்கு ஒன்லைன் முறைமையில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வழங்கப்பட்ட அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவுத் திகதி இன்று புதன்கிழமையுடன் முடிவடையவிருந்த நிலையில் நாளை மறுதினம் 12ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களுக்கான இறுதி திகதி எந்தக் காரணத்திற்காகவும் மாற்றம் செய்யப்பட மாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வாள்வெட்டில் மதகுரு காயம்

கொழும்பு, ஜூலை 10

மாத்தளையில் வாள் வெட்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் கிறிஸ்தவ மதகுரு ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறுவர் பூங்கா ஒன்றுக்கு உடற்பயிற்சி செய்வதற்காக நேற்று காலை சென்றுள்ளார். அங்கு வைத்தே அவர் குழு ஒன்றால் வாளால் வெட்டப்பட்டுள்ளார்.

அங்கு நின்றவர்கள் மதகுருவை மீட்டு மாத்தளை ஆதார மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

மாத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். புதுமையான நாள்.

**இடபம்** கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். உத்தியோகத்தில் அமைதி நிலவும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரம் செழிக்கும். தைரியம் கூடும் நாள்.

**கடகம்** கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**சிம்மம்** ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள் சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**கன்னி** கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**துலாம்** குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**விருச்சிகம்** நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு** கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். சாதிக்கும் நாள்.

**மகரம்** சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். மறைமுக விமர்சனங்கள் வந்து போகும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**கும்பம்** எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**மீனம்** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

# தமிழகத்தில் கொலைகள் நடக்காத நாளே இல்லை!

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

சேலம், ஜூ10


தமிழகத்தில் தி. மு. க. ஆட்சிக் காலத்தில் கொலைகள் நடக்காத நாளே இல்லை. பொலிஸ் உயர் அதிகாரிகளை மாற்றுவதால் மட்டும் சட்டம் - ஒழுங்கு மாறிவிடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

சேலத்தில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிச்சாமி முன்னிலையில் ஓ. பி. எஸ். மற்றும் அ. ம. மு. கவைச் சேர்ந்தவர்கள் 500இற்கும் மேற்பட்டோர் அ. தி. மு. கவில் இணைத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில், தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளது. பொலிஸ் அதிகாரிகளை மாற்றுவதால் மட்டும் சட்டம் - ஒழுங்கு பாதுகாக்கப் படாது. பொலிஸ் துறையை கையில் வைத்துள்ள முதல்வர் மு. க. ஸ்டானின் சிறப்பாகச் செயல்படவில்லை. போதைப் பொருள் விற்பனை இங்கு தாராளமாக நடக்கிறது- என்றார். (எ)



# “ஆம்ஸ்ட்ராங் கொலைக்கு உளவுத்துறையே காரணம்”



விழுப்புரம், ஜூலை 10

உளவுத்துறை சரியாக பணியாற்றியிருந்தால் ஆம்ஸ்ட்ராங் கொல்லப்பட்டு இருக்கமாட்டார் என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் பா. ம. க. சார்பில் போட்டியிடும் சி. அன்புமணியை ஆதரித்து அய்யூர் அகரம், தென்னமாதேவி உள்ளிட்ட கிராமங்களில் பிரசாரம் செய்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தி. மு. கவினர் கொடுக்கும் பணம், சாராயம், கஞ்சா விற்று ஈட்டிய பணம். கடந்த தேர்தலில் கல்விக்கடன், நகைக்கடன் இரத்து என்றார்கள். செய்தார்களா? இந்தத் தொகுதிக்கு எவ்வளவோ அமைச்சர்கள் வந்தார்கள். உங்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (எ)

# “இ. பி. எஸ். சிறை சென்றால் அ. தி. மு. க. ஒருங்கிணையும்”

சேலம், ஜூலை 10

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு உள்ளிட்ட பெருங்குற்றங்கள் குறித்து மத்திய, மாநில அரசுகள் கடமையைச் சரியாகச் செய்தால் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி சிறைக்குச் செல்வார். அப்போது, அ. தி. மு. கவை எளிதாக ஒருங்கிணைத்து விடலாம் என பெங்களூரு புகழேந்தி தெரிவித்தார்.

சேலத்தில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

“பகுஜன் சமாஜ் கட்சி மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் கண்டிக்கத்தக்கது. தமிழகத்தில் அரசியல் தலைவர்களுக்கு பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிட்டது. எனவே, அச்சுறுத்தல் உள்ள தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும். இது சம்பந்தமாக தமிழக முதல்வர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (எ)

# இன்று இடைத்தேர்தல்

விழுப்புரம், ஜூலை 10

விக்கிரவாண்டி சட்டப் பேரவை இடைத்தேர்தல் பிரசாரம் ஓய்ந்தது. இன்று வாக்குப் பதிவு நடைபெறுகிறது. தேர்தல் ஆணைக்குழு உத்தரவை தொடர்ந்து, தொகுதிக்குள் இருந்த வெளிநபர்கள் வெளியேறினர்.

விக்கிரவாண்டி தொகுதியின் தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர் புகழேந்தி கடந்த ஏப்ரல் 6 ஆம் திகதி உடல்நலக் குறைவால் காலமானார். இதனையடுத்து, இந்தத் தொகுதிக்கு இன்று இடைத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பிரதான எதிர்க்கட்சியான அ. தி. மு. க. இந்த இடைத்தேர்தலில் போட்டியிடவில்லை. தி. மு. க., பா. ம. க., நாம் தமிழர் கட்சி என மும்முனை போட்டி நிலவுகிறது. மொத்தம் 29 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

# அ. தி. மு. கவை ஒருங்கிணைக்க சுற்றுப் பயணம்



சென்னை, ஜூலை 10

அ. தி. மு. கவை ஒருங்கிணைக்கும் நடவடிக்கையாக வி. கே. சசிகலா எதிர்வரும் 16 ஆம் திகதி தென்காசியில் தனது சுற்றுப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார்.

2026 இல் ஒன்றுபட்ட அ. தி. மு. க. ஆட்சிக்கு வர வேண்டும் என்று சசிகலா அண்மையில் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்திருந்தார். மேலும், கட்சியை ஒன்றிணைக்கவும், 2026 இல் ஆட்சி மாற்றத்தை கொண்டு வரவும், தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, தொண்டர்களையும் பொது மக்களையும் சந்திக்க இருப்பதாகவும் சசிகலா அறிவித்துள்ளார். (எ)

# மனு தள்ளுபடி

சென்னை, ஜூலை 10

சட்டவிரோத பணப் பரிமாற்ற வழக்கிலிருந்து தன்னை விடுவிக்கக் கோரி முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தாக்கல் செய்திருந்த மனு மீதான உத்தரவை ஒத்தி வைக்கக் கோரி மூன்று புதிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அதில், நீதிமன்ற உத்தரவுப் படி வழங்கப்பட்ட வங்கி ஆவணங்களில் வேறுபாடுகள் உள்ளதால் விடுபட்ட ஆவணங்களை வழங்க உத்தரவிட வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது. இந்த மனுவே தள்ளுபடி செய்யப்பட்டது. (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தரின் போதனைகளுக்கும் அறிவியல் உலகுக்கும் தொடர்பு!

## ஆராய நடவடிக்கை என்கிறார் ரணில்

கொழும்பு, ஜுலை 09

**புத்தரின் போதனைகளுக்கும் அறிவியல் உலகத்திற்கும் உள்ள தொடர்பை ஆராய ஒரு புதிய நிறுவனம் விரைவில் ஸ்தாபிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இலங்கை அமரபுர மகா நிகாயவின் அமரபுர தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அமரபுர நிகாய நவீன இலங்கையின் வரலாற்றின் ஒரு பகுதியாகும். இந்த அரமரபுர மகா நிகாய நமது மஹாகராவே ஸ்ரீ ஞானவிமலதிஸ்ஸ தேரரின் முயற்சியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

இன்று நாம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உலகில் வாழ்கிறோம். இன்று உலகம் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு மாறிவிட்டது. குறிப்பாக உலகம் முழுவதும் செயற்கை நுண்ணறிவில் கவனம் செலுத்தும்போது நாமும் அதில் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்த 05-10 ஆண்டுகளில், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்திற்கும் மனதிற்கும் இடையிலான தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும். பௌத்த மதத்துக்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கான வேலைத் திட்டத்தை அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் ஆரம்பிக்குமாறு தொழில்நுட்ப அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

மகா சங்கத்தினருடனும், பொது மக்களுடனும் கலந்துரையாடி இப்பணிகளைத் தொடர எதிர்பார்க்கின்றோம்.

இன்று நாம் ஒரு சமூகமாக முன்னேற வேண்டும். அதன் போது நாம் பின்வாங்க முடியாது. அனுராதபுர சகாப்தம் நமது நாட்டின் புகழ்பெற்ற சகாப்தமாக கருதப்படுகிறது.

அநுராதபுர காலத்தில், மகாவிகாரை, ஜேதவனாராம மற்றும் அபயகிரிய போன்ற முக்கிய விகாரைகள் தோன்றின.

அப்போது, பொது மக்கள், பௌத்த துறவிகள் உட்பட அனைவரும் இந்தப் பிரிவெனாக்களில் கல்வி கற்றனர்.

மஹாசேய, ஜேதவனாராம, அபயகிரிய போன்ற பாரிய அற்புதங்களை நிர்மாணிக்கும் அறிவை எமது மக்கள் பிரிவெனா கல்வியின் மூலம் பெற்றனர் என்பதைக் கூற வேண்டும்.

மேலும், தற்போதைய பொறியாளர்களையும் ஆச்சரியப்படுத்தும் நமது சிறந்த நீர்ப்பாசன கலாசாரமும், சீகிரியா போன்ற சிறந்த படைப்புகளும் பிரிவெனா கல்வி முறையால் உருவானது. நவீன அறிவையும் இந்த சிறப்புகளையும் இணைத்துக்கொண்டு ஒரு நாடாக நாம் முன்னேற வேண்டும்.

யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அநுராதபுரம் முழுவதிலும் உள்ள அகழ்வாராய்ச்சிப் பணிகள் தொடர்பாக அவரிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்க எதிர்பார்க்கிறேன்.

அனுராதபுரம் மகா விகாரையின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு புதிய நிறுவனமொன்றை ஸ்தாபிக்க எதிர்பார்க்கின்றோம். பௌத்தத்திற்கும் நாம் வாழும் நவீன தொழில்நுட்ப உலகிற்கும் இடையே ஒரு பெரிய தொடர்பு உள்ளது. அந்த தொடர்பை புரிந்து கொண்டு முன்னேற வேண்டும்-என்றார்.

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பதில் வைத்திய அத்தியட்சகர் பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஜுலை 10

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் நேற்றுக் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

சுகாதார அமைச்சின் கடிதத்துக்கு அமைய, வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரண, யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் முன்னிலையில் புதிய பதில் வைத்திய அத்தியட்சகர் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகராக இருந்த ராமநாதன் அர்ச்சுனாவை மாற்றக் கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் பதில் வைத்திய அத்தியட்சகருக்கு ஆதரவாக தென்மராட்சி பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் பாரிய போராட்டம் நடத்தப்பட்ட நிலையில், பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா சுகவீன விடுமுறை என தெரிவித்து கொழும்புக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



## கரையோர ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, ஜுலை 10

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் ரயில் ஒன்று தடம் புரண்டதால் கரையோர மார்க்கத்தில் ரயில் சேவைகள் தாமதமடைந்ததாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.35 மணியளவில் பாணந்துறை ரயில் நிலையத்தில் இருந்து மருதானை ரயில் நிலையத்தை நோக்கிப் பயணித்த ரயில் ஒன்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்குள் நுழையும் போது தடம் புரண்டுள்ளது.

இதன் காரணமாக கரையோர மார்க்கத்தில் ரயில் சேவைகள் தாமதமடைந்ததுடன் நேற்று பிற்பகல் இயக்கப்படவிருந்த பல ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# வீட்டுக்கான வாடகையை சம்பளத்தில் அறவிடவும்!

## கெஹலிய ரம்புக்வெல கடிதம்

கண்டியிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்திற்கான வாடகையை தமது பாராளுமன்ற உறுப்பினர் சம்பளத்திலிருந்து அறவிட விருப்பம் தெரிவித்து, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு கடித மூலம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் வீடு ஆர்ப்பாட்டத்தின் போது தீ வைக்கப்பட்டு அழிக்கப்பட்டது.இதன் பின்னர் அவர் தற்காலிகமாக வாடகை அடிப்படையில் அரசாங்கத்தின் கண்டி மலபார் வீதியிலுள்ள மத்திய மாகாண சபை முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தை வாடகைக்குப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்த வீட்டை பாராளுமன்ற உறுப்பினர் சம்பளத்தில் நூற்றுக்கு 10 வீதம் அறவிடும் உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அவர் பெற்றுள்ளார்.

கெஹெலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராகவும் சுற்றாடல் அமைச்சராகவும் பதவி வகித்த காலத்தில், அமைச்சின் செயலாளர் மூலம் மேற்படி வாடகை நிதி மத்திய மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் அந்த நிதி வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டு விட்டது. அந்த வகையில் மத்திய மாகாண சபை அந்த பணத்தைப் பெற்றுத் தருமாறு, பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதற்கு பதில் அளித்திருந்த பாராளுமன்ற செயலாளர் நாயகம், மாதிவெலவில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வீடுகளுக்கு பணம் அறவிடும் அதிகாரம் மட்டுமே தமக்கு உள்ளதாகவும் வெளியில் உள்ள வீடுகளுக்கு அவ்வாறு பணம் அறவிடும் அதிகாரம் தமக்கு கிடையாது என்றும் அறிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் முன்னாள் அமைச்சர் அதற்கான விருப்பத்தை தெரிவித்துள்ள நிலையில், அந்த பணத்தை அறவிட முடியும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

# 22,000 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்கு இணைத்துக்கொள்க!

## எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள்

கொழும்பு, ஜுலை 10

2020 முதல், கல்வித்துறையில் 40000 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் போது, ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் முகமாக ஏறக்குறைய 22000 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். கொரோனா கோவிட் காலத்தில் இணையவழி ஊடாக கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போது, இந்த உபகரணங்கள் போதியளவு இல்லாமல் இருந்தும் ஒரு சாதனத்தைப் பயன்படுத்தி தொலைதூரக் கல்வி நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னெடுத்து வந்தனர். இவ்வாறு தமது பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வந்த இந்த 22000 பேருக்கும் ஏன் அவர்களுக்கென குறிப்பிட்ட நிலையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படாதிருக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

இந்த 22000 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் கல்வித்துறையில் உரிய இடம் வழங்கப்படவேண்டுமென கோரிக்கை விடுத்த அவர், இதற்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். இந்த தரப்பினருக்கு ஏற்புடைய உரிய தீர்வு கிடைக்கும் திகதி என்ன? என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார். இதற்கு மேலதிகமாக கல்வித்துறையில் காணப்படும் 7 பகுதிகளிலும் குறைபாடுகள் காணப்படுவதாகவும், அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார். (அ)

# வாள், கத்தியால் தாக்கி ஒருவர் கொலை; தப்பிச் சென்ற 3 சந்தேக நபர்கள் கைது!

கொழும்பு, ஜுலை 10

கையடக்கத் தொலைபேசியை திருடிய சம்பவம் தொடர்பில் நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் வாள் மற்றும் கத்தியால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாளிகாவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு 10, மாளிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து கொலைச் சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட வாள் மற்றும் மன்னா கத்தி என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாளிகாவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1700 ரூபா சம்பள உயர்வுக்கு தம்மிக்க பெரேராவே தடை!

## சபையில் அமைச்சர் ஜீவன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 10

**பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுக்கு ஜனாதிபதியாக ஆசைப்படும் தம்மிக்க பெரேராவே தடையாக இருந்துவருகின்றார் - என்று இதொகாவின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

19 பெருந்தோட்ட நிறுவனங்கள் இலாபத்தில் இயங்குகின்றன.

ஆயிரத்து 700 ரூபா சம்பளத்தை ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரே எதிர்க்கின்றார். அவர் தான் தம்மிக்க பெரேரா. 2 வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார். ஆனால் ஒரு தடவைகூட பாராளுமன்றத்தில் உரையாற்றியதில்லை.

ஒரு நிறுவனத்தை ஒழுக்காக நடத்தாதவர் எப்படி நாட்டை நிர்வகிப்பார்?

தம்மிக்க பெரேராவின் 2 பெருந்தோட்ட நிறுவனங்களும் பல மில்லியன் இலாபம் பெற்றுள்ளன.

இன்று நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள்தான் கொழும்பு வந்தனர். சம்பளம் இல்லையேல் ஒரு லட்சம் தொழிலாளர்கள் கொழும்புக்கு வருவார்கள்-என்றார். (அ)

# வேலையற்ற பட்டதாரிகள் அரசின் நிலைப்பாடு என்ன?

## அரச தரப்பிடம் கேள்வி எழுப்பிய சஜித்

கொழும்பு, ஜூலை 10

வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பில் அரசின் நிலைப்பாடு தொடர்பில் பதிலளிக்க வேண்டும் என கல்வி அமைச்சரிடம் எதிர்க்கட்சித் தலைவர் வினவியுள்ளார்.

நேற்று இடம்பெற்றுள்ள பாராளுமன்ற அமர்வின் போதே அவர் இதனை கேட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த சில நாட்களாக வடக்கு மாகாணத்திலும் அதே போன்று கிழக்கு மாகாணத்திலும் சென்ற சந்தர்ப்பத்திலே அவர்கள் போராட்டங்களையே கலந்து கொண்டிருந்ததுடன் தமது மனக்குறைகளை சமர்ப்பித்தார்கள்.

வீதிகளில் அவர்களுடன் கலந்துரையாடும் பொழுது வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என கூற வேண்டும்

விசேடமாக சொல்ல போனால் அந்த பட்டத்தாரிகளினுடைய தகைமைகளுக்கு அமைவாக அரசாங்கம் பல்வேறு துறைகளிலே மிகவு வெற்றிடமாக உள்ள துறைகளில் ஆட்சேர்க்கை படாதது ஏன் என்பது தொடர்பாக அவரப்பிகள் வினா தொடுத்திருக்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்திலே விசேடமாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்னவென்றால் அதே போன்று சபா பீடத்தில் சமர்ப்பிக்கின்றேன். அதே போன்று மட்டக்களப்பு மாவட்டத்திலும் இந்த பட்டதாரிகள் மூலமாக அவர்கள் கூறிய கோரிக்கைகளை ஹன்சாட்டில் உள்ளடக்குமாறு கேட்டுக்கொண்டு உங்களுக்கு பிரதியை சமர்ப்பிக்கின்றேன். அரசசார்பில் இது தொடர்பில் பதிலளிக்க வேண்டும்-என்றார். (அ)

# வவுனியா பல்கலை. துணைவேந்தராக பேராசிரியர் அற்புதராஜா கடமையேற்பு

வவுனியா, ஜூலை 10

வவுனியா பல்கலைக்கழகத்தின் இரண்டாவது துணைவேந்தராக பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா நேற்று முன்தினம் கடமைகளை பொறுப்பேற்றார்.



வவுனியா பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு மண்டபத்தில் பதிவாளர் நடராஜா ராஜவிசாகன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

புதிய துணைவேந்தர் அருளம்பலம் அற்புதராஜா, ஜனாதிபதியால் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தை கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டார்.

வவுனியா பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகத்தினர் இதன்போது பிசன்னமாகியிருந்தனர். (அ)

# முறைகேடாக நடக்கும் இலங்கையர்கள் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்படுவர்!

கொழும்பு, ஜூலை 10

வேலைவாய்ப்புகளுக்காக இஸ்ரேலுக்குச் சென்று முறைகேடாக நடப்பவர்களை நாட்டிற்கு திரும்ப அழைத்து அவர்கள் மீண்டும் வெளிநாட்டிற்கு செல்ல முடியாவாறு கறுப்பு பட்டியலில் இணைக்கும் பணியை மேற்கொண்டு வருவதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.



இஸ்ரேலில் விவசாயத் துறையில் பணிக்குச் செல்லும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு விமானச் சீட்டு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இதனை கூறினார்.

அண்மைக்காலமாக இஸ்ரேலிய விவசாயத் துறையில் இலங்கைத் தொழிலாளர்களுக்கு வாய்ப்புகள் கிடைப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளபோதிலும் இஸ்ரேலிய விவசாயத்துறை பணிகளுக்கான வாய்ப்புகளை இலங்கையர்கள் பெறுவது மகிழ்ச்சியான செய்தி எனவும் அவர் தெரிவித்தார்.

முதல்கட்டமாக இஸ்ரேலுக்கு அனுப்பிய பணிக் குழுக்களின் நெருக்கடிகள் காரணமாக இஸ்ரேலிய விவசாயத் துறையில் வேலைகள் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் போன்று எம்மவர்களின் சிலர் அங்கு போராட்டம் நடத்தியதால் இவ்விளைவு ஏற்பட்டதுடன் தொடர்ந்தும் இஸ்ரேல் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் மூலம் எங்களுக்கு மீண்டும் விவசாயத் துறையில் பணியாளர்களை அனுப்ப வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையில் இஸ்ரேலில் விவசாயத்துறையில் பணிக்காக செல்லும் 43 குழுவினர் சிறந்த முறையில் பணியாற்றுவதன் மூலம் இஸ்ரேலுக்கு வேலை வாய்ப்பு நிமித்தம் செல்லக் காத்திருக்கும் 8000 பேருக்கு வாய்ப்புக்கள் கிடைக்கும் எனவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (அ)

# மலேசிய பிரதமரை இலங்கை வருமாறு அழைப்புவிடுத்த கிழக்கு ஆளுநர் செந்தில்

கோலாலம்பூர், ஜூலை 10

மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் நேற்று செவ்வாய்க்கிழமை கோலாலம்பூரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மலேசிய பாராளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ சரவணன் முருகனின் விசேட அழைப்பின் பேரில் உத்தியோகபூர்வ பயணமாக ஆளுநர் செந்தில் தொண்டமான் கடந்த ஞாயிற்றுக்கிழமை மலேசியாவுக்குச் சென்றார்.

பிரதமர் அன்வர் இப்ராஹிமுடனான சந்திப்பில் மலேசியா மற்றும் இலங்கைக்கு இடையிலான இரு தரப்பு உறவுகள் குறித்து ஆழமான கலந்துரையாடலை ஆளுநர் செந்தில் தொண்டமான் நடத்தினார்.

மலேசியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வலுவான இரு தரப்பு உறவுகளை உருவாக்குவதற்கான சாதகமான காரணிகள் குறித்தும் ஆளுநர் செந்தில் தொண்டமான் மலேசியப் பிரதமருடன் கலந்துரையாடினார்.

அத்துடன், இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான அழைப்பையும் பிரதமர் இப்ராஹிமுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் விடுத்ததுடன், இலங்கையில் வாழும் பெருந்தோட்ட சமூகத்தின் 200 வருட நினைவு முத்திரையையும் மலேசியப் பிரதமருக்கு வழங்கியிருந்தார்.



# அத்துருகிரியவில் கிளப் வசந்த கொலைக்கு பயன்படுத்தப்பட்ட பச்சை குத்தும் இளைஞன்!

கொழும்பு, ஜூலை 10

05 வருடங்களுக்கு முன்னர் அதாவது 2019ஆம் ஆண்டு டுபாயில் வைத்து பாதாள உலகக் குழுத் தலைவர் மாகந்துரே மதுஷ், கஞ்சிப்பான இம்ரான் மற்றும் பலரைக் கைது செய்ததில் "கிளப் வசந்த" ஈடுபட்டுள்ளதாகத் தற்போது தகவல்கள் வெளியாகி வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மதுஷுக்குச் சொந்தமான 100 கோடி ரூபா பணம் கிளப் வசந்த வசம் இருப்பதாகவும் காஞ்சிப்பான பல சந்தர்ப்பங்களில் அந்தப் பணத்தை வசந்தவிடம் கேட்டிருக்கிறார். ஆனால் அந்த தொகையை வசந்த திருப்பிக் கொடுக்கவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

இவ்வாறானதொரு நிலை காரணமாக நுவரெலியா பிரதேசத்தில் கிளப் வசந்தவை கொலை செய்ய திட்டமிடப்பட்டதாகவும், அதுவும் தோல்வியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் நேற்று முன் தினம் அத்துருகிரிய பிரதேசத்தில் கிளப் வசந்தவை சுடுவதற்கு கச்சிதமாக இடம் தயார் செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த கொலைக்கான திட்டங்கள் 03 மாதங்களாக தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்காக பலப்பிட்டியில் வசிக்கும் பச்சை குத்திக் கொள்ளும் திறன் கொண்ட இளைஞர் ஒருவர் பயன்படுத்தப்பட்டுள்ளார். அந்த இளைஞன் டுபாயில் உள்ள தனது நண்பர் மூலம் அங்கு வசிக்கும் மற்றுமொரு நபருடன் நெருங்கிய உறவைப் பேணி வந்துள்ளார்.

அந்த இளைஞனுக்கு பச்சை குத்தும் திறன் இருந்தபோதிலும், அதற்கான நிலையமொன்றை அமைப்பதற்கு போதுமான சொத்துக்கள் அவரிடம் இல்லை.

அப்போது, டுபாயில் உள்ள அவரது நண்பர் ஒருவர், பச்சை குத்தும் பார்லர் கட்ட பணம் தருவதாக கூறினார். அதற்காக கிளப் வசந்தவை கொல்ல உதவுமாறு கேட்டுக் கொண்டார்.

அதன்படி இந்த இளைஞனின் தனது வங்கிக் கணக்கில் 10 இலட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது. இதனையடுத்து கொலைக்கு இலக்கான கிளப் வசந்தவை பச்சை குத்தும் நிலைய திறப்பு விழாவிற்கு அழைத்து வர அழைப்பு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், இந்த நிகழ்விற்கு மற்ற பிரபல கலைஞர்களை அழைக்குமாறு பச்சை குத்தும் கடையின் உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரமற்ற ‘13’ தமிழர் விரும்பும் தீர்வாகாது

## ஒருபோதும் ஏற்கோம் என்கிறது இலங்கைத் தமிழ் அரசு கட்சி

கொழும்பு, ஜூலை 10

**பொலிஸ் அதிகாரமின்றி 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது குறித்துக் கலந்துரையாடிவருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுவதை முற்றாக நிராகரிப்பதாகவும், அது ஒருபோதும் தமிழர் விரும்பும் அரசியல் தீர்வாக அமையாது எனவும் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், இவ்வாறான கருத்துக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் மத்தியில் அவருக்குப் பாரிய பின்னடைவையே தேடித்தரும் எனவும் கூறினார்.**

மறைந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் பிரிக்கப்படாத ஒருமித்த நாட்டுக்குள் அரசியல் தீர்வைக் கோரியதாகவும், தற்போது அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை பொலிஸ் அதிகாரமின்றி, மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட வேறு பல அதிகாரங்களுடன் நடைமுறைப்படுத்துவது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வருவதாகவும் இரா.சம்பந்தனின் இறுதிக் கிரியை நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

இருப்பினும் ஜனாதிபதியின் இக்கருத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது எனத் தெரிவித்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை பொலிஸ் அதிகாரமின்றி நடைமுறைப்படுத்துவது ஓரளவுக்கேனும் ஏற்றுக்கொள்ளத்தக்க அர்த்தமுள்ள அரசியல் தீர்வாக அமையாது எனச் சுட்டிக்காட்டினார்.

“சம்பந்தன் பிளவுபடாத, ஒருமித்த இலங்கைக்குள் அரசியல் தீர்வினைக் கோரியதாக ஜனாதிபதி கூறுகின்றார். இருப்பினும் அவர் பிளவுபடாத இலங்கைக்குள் தமிழர்களைத் தேசிய இனமாக அங்கீகரிக்கக்கூடிய, சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டி முறையிலான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வையே கோரினார்.

மாறாக அவர் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வைக் கோரவில்லை. அவ்வாறிருக்கையில் பொலிஸ் அதிகாரங்களின்றி 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்துக் கலந்துரையாடிவருவதாக ஜனாதிபதி கூறுகின்றார். அது ஓரளவுக்கேனும் ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல் தீர்வாக ஒருபோதும் அமையாது.

எனவே உரையில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்தை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம்” எனவும் சிறிதரன் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி ஏற்கனவே மாகாணங்களுக்கான கல்வி மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும், எனவே மேலும் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படுவதை கிஞ்சித்தும் ஏற்கமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் தமிழ் மக்களை தேசிய இனமாக அங்கீகரித்து, சுயநிர்ண உரிமையை உறுதி செய்யக்கூடிய விதத்தில், சமஷ்டி அடிப்படையிலான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வழங்குவது குறித்து இதயசுத்தியுடன் பேசுவதற்கு ஜனாதிபதி எம்மை அழைத்தால், அப்பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்கு தமிழரசுக்கட்சி தயாராக இருக்கின்றது எனவும் சிறிதரன் கூறினார். (அ)

# தோட்டத் தொழிலாளர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, ஜூலை 10

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான 1700 ரூபாய் என்ற நாளாந்த வேதனத்தை வழங்க மறுக்கும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் காரணமாக நேற்று கொழும்பு - பம்பலப்பிட்டி பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

பம்பலபிட்டி - வஜிர வீதியில் உள்ள தோட்டத் துரைமார் சங்க கட்டடத்திற்கு முன்பாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நேற்று முற்பகல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது தோட்டத் தொழிலாளர்கள் குறித்த கட்டடத்திற்குள் பிரவேசிக்க முற்பட்டபோது, அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து, பொலிஸாரின் தலையீட்டையடுத்து அங்கு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தலைவராக கரு ஜயசூரிய

கொழும்பு, ஜூலை 10



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவராக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் முதலாவது கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோதே கருஜயசூரிய ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

கருஜயசூரியவின் பெயரை முன்னாள் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால முன்மொழிந்ததுடன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமேதா ஜி. ஜயசேன அதனை வழிமொழிந்தார்.

அத்துடன், ஒன்றியத்தின் அழைப்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பிரேமரத்ன அனைத்து உறுப்பினர்களினதும் ஏகோபித்த முடிவில் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் முகங்கொடுக்கும் சிக்கல்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், அந்த சிக்கல்களை நிவர்த்தி செய்துகொள்வதற்கு செயலாளர் நாயகத்தின் அலுவலகம் நடவடிக்கை எடுப்பதாக செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் அறிவு மற்றும் அனுபவம் நாட்டின் எதிர்கால மேம்பாட்டுக்கு பங்களிப்பு செய்துகொள்வதன் முக்கியத்துவம் தொடர்பில் சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய, ஒன்றியத்துக்கான யாப்பை அமைத்தல் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் சர்வதேச தொடர்புகள் மற்றும் அரசியல் அனுபவத்தை பயன்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் உப குழுக்களை நியமிப்பதற்கு இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய, நலன்புரி அலுவலர்கள் பற்றிய உப குழு, யாப்பு பற்றிய உப குழு, அரசியல் அலுவல்கள் பற்றிய உப குழு, பொருளாதாரம் மற்றும் சர்வதேச அலுவல்கள் பற்றிய உப குழு என உப குழுக்கள் நியமிக்கப்பட்டன. (அ)

# பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதை எதிர்த்து நீதிமன்றம் சென்றோரால் ஆசிரியர் பற்றாக்குறை

## சபையில் அமைச்சர் பிரசன்ன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 10

பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்கு எதிராக நீதிமன்றத்திற்கு சென்றவர்களினால் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிராக சில குழுக்கள் கடந்த காலங்களில் நீதிமன்றத்திற்கு சென்றிருந்தன.

இதனால் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. மேல்மாகாணத்தில் தான் இந்த ஆசிரியர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. மேல்மாகாணத்தில் ஆசிரியர் பரீட்சை நடாத்தப்பட்டு ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆனால் பாடவாரியாக ஆட்சேர்ப்பு நடைபெறும் போது சிலர் கைவிடப்பட்டுள்ளனர்.

ஆளுநருடன் கலந்துரையாடிய பின்னர் இது தொடர்பாக தீர்மானங்களை எடுத்தோம். மேல் மாகாணத்தில் வெற்றிடங்களை விட பட்டதாரிகளே அதிகம். அதனால்தான் பரீட்சை நடத்தப்பட்டது. ஆனால் ஏனைய மாகாணங்களில் அவ்வாறான நிலை இல்லை.

நான் மாகாண முதலமைச்சராக கடமையாற்றிய போது பரீட்சைகளை நடாத்தி பட்டதாரிகளை உள்வாங்கினோம். அடுத்து பட்டதாரிகள் தாமாகவே முன்வந்து பாடசாலைகளில் கற்பிக்க வந்தனர். அவர்கள் அதை ஒரு பயிற்சியாக எடுத்துக் கொண்டனர்.

எனவே, மேல் மாகாணத்தின் பிரச்சினை பாரியளவில் தீர்க்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனவே மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டு பிரதேச செயலக மட்டத்தில் அவர்களின் தகவல்கள் பெறப்பட்டன. இது தொடர்பாக நான் அமைச்சர் சுசிலிடம் பேசி 45 வயதுக்குட்பட்ட பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளோம்-என்றார். (அ)

# அலி சப்ரியை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு!

கொழும்பு, ஜூலை

சொத்துக்களை சேதப்படுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மேலதிக மாவட்ட நீதிபதியும் நீதவானுமான திருமதி அயோனா விமலரத்ன, கற்பிட்டி சுற்றுலா நீதவான் நீதிமன்றில் குறித்த பகிரங்க பிடியாணையைப் பிறப்பித்துள்ளார்.

புத்தளம் நீதவான் நீதிமன்றில் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை எதிரியாக குறிப்பிட்டு கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறிஞ்சாம்பிட்டியில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்று தாக்கல் செய்த வழக்கை விசாரித்த போதே நீதவான் மேற்படி உத்தரவை வழங்கினார்.

அரச சார்பற்ற நிறுவனமொன்றுக்கு சொந்தமான கட்டடத்துக்குள் நுழைந்து சொத்துக்களை சேதப்படுத்தியதாக பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக கற்பிட்டி பொலிஸாரால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வடக்கு - கிழக்கு இணைப்பும் அரசியல் தீர்வும் மிகஅவசியம்

## அண்ணாமலையிடம் எடுத்துரைத்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர்



திருகோணமலை, ஜூலை 10

**ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் வடக்கு - கிழக்கு இணைப்பின் முக்கியத்துவம் குறித்து இந்தியாவின் ஆளுங்கட்சியான பாரதீய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவருக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் தலைமையிலான குழுவினருக்கும், பா. ஜ. க. தமிழகத் தலைவர் அண்ணாமலைக்கும் இடையில் திருகோணமலையில் நடைபெற்ற சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஆளுநர் செந்தில் தொண்டமானும் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது, திருகோணமலையில் தமிழ் மக்கள் முகங்கொடுத்துவரும் காணி அபகரிப்பு, மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட பல தரப்பட்ட பிரச்னைகள் தொடர்பில் அண்ணாமலைக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அதுமாத்திரமன்றி தமிழ் மக்கள் கோரும் அரசியல் தீர்வு மற்றும் அதன் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டதுடன், வடக்கு - கிழக்கு இணைப்பின் முக்கியத்துவம் பற்றியும் தமிழ் அரசுக் கட்சியினரால் அண்ணாமலையிடம் எடுத்துரைக்கப்பட்டது. (எ)




# ஒரு நாள் இயற்கை முறை வீட்டுத்தோட்ட செயலமர்வு

சம்மாந்துறை, ஜூலை 10

பேரா உதவிக் கரங்கள் அமைப்பின் நிதி அனுசரணையில் நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தால் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்துக்கு சிறீ கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்கான ஒரு நாள் இயற்கை விவசாய வீட்டுத் தோட்டச் செயலமர்வு நடைபெற்றது.

இந்தத் திட்டம் தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு மாதமும் மாணவர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்குவதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் தங்களது ஓய்வு நேரத்தில் பெற்றோருடன் சேர்ந்து வீட்டுத் தோட்டம் செய்வதால் நஞ்சற்ற உணவு உற்பத்தி மற்றும் ஒவ்வொரு வீட்டிலும் 8,000 ரூபாய்க்கு மேல் சேமிக்க முடியும் என்பதை இலக்காகக் கொண்டு இச் செயலமர்வு திட்டமிட்டிருப்பது விசேட அம்சமாகும்.

இதன்போது, 60 மாணவர்களுக்கு வீட்டுத் தோட்டம் செய்வதற்கான கன்றுகள் மற்றும் விதைகள் வழங்கப்பட்டன. (எ)

# தாந்தாமலை முருகன் ஆலய பெருந்திருவிழா ஆரம்பம்





மட்டக்களப்பு, ஜூலை 10

வரலாற்று சிறப்பு மிக்க மட்டக்களப்பு தாந்தாமலை சிறீ முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (எ)

# கிணற்றில் யுவதியின் சடலம் இதுவரை 7 பேர் கைதாகினர்

## காதலன் பொலிஸ் தடுப்புக்காவலில்

மூதூர், ஜூலை 10

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளிவெட்டி கிராமத்தில் உள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட தங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த யுவதியின் காதலனான பிரதான சந்தேக நபர் மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் மூதூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்பட்டபோது, பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஆறு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, கடந்த சனிக்கிழமை மூதூர் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

அப்போது எதிர்வரும் 19 ஆம் திகதி வரை அந்த ஆறு பேருக்கும் விளக்கமறியல் உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே பிரதான சந்தேக நபரான படுகொலை செய்யப்பட்ட யுவதியின் காதலன் நேற்று முன் தினம் மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை யுவதியின் காதலன், காதலனின் தந்தை, சகோதரி, அவரது வீட்டில் வேலை செய்தவர், ஜே. சி. பி. வாகன சாரதிகள் இருவர் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சேருவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் கிராமத்தைச் சேர்ந்த நடேஸ்குமார் வினோதினி (வயது- 25) என்ற யுவதி காணாமல் போயிருந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை பாழடைந்த கிணறு ஒன்றில் கல்லோடு கட்டி போடப்பட்டிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இதன்போது அவருடைய ஆவணங்கள் அடங்கிய கைப்பை, உடைந்த தலைக்கவசம் என்பனவும் மீட்கப்பட்டிருந்தன.

இந்த சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தபோது தலைப்பகுதி தாக்கப்பட்டு மண்டையோடு உடைந்திருந்ததாகவும், தலையின் பின் பகுதியில் பாரிய துளை இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தீவிர விசாரணைகளில் ஈடுபட்ட பொலிஸார், காதலனின் வீட்டில் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இரும்புக்குழாய் உட்பட சில சான்றுப் பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர். இந்த நிலையில் அந்த யுவதியின் காதலனிடம் விசாரணைகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. (எ)

# பாராளுமன்ற உறுப்பினராக குகதாசன் நேற்று பதவியேற்பு

திருகோணமலை, ஜூலை 10

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக ச. குகதாசன் நேற்றுப் பதவியேற்றார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் மறைவு காரணமாக வெற்றிடமான திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு கதிரவேலு சண்முகம் குகதாசன் தெரிவு செய்யப்பட்ட நிலையில் நேற்றுப் பதவியேற்றார்.

பாராளுமன்றம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. இதன்போது, சபாநாயகர் முன்னிலையில் சண்முகம் குகதாசன் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றார். (எ)



# தபால் அலுவலக ஊழியர்கள் 2ஆவது நாளாக பகிஷ்கரிப்பு

## பொதுமக்கள் பாதிப்பு

கிண்ணியா, ஜூலை 10

திருகோணமலை கிண்ணியா, குறிஞ்சாக்கேணி தபால் அலுவலக ஊழியர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் தொழிற்சங்க வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் மின்சாரக் கட்டணம் செலுத்துதல், தபால் சேவை உள்ளிட்ட தபால் அலுவலக சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தந்த பொதுமக்கள் சேவையைப் பெற்றுக் கொள்ளாது ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இந்தியர்கள் விரைவில் விடுவிப்பு

## மோடியின் கோரிக்கையை ஏற்றார் புடின்



மொஸ்கோ, ஜூலை 10

**உக்ரைனுக்கு எதிரான போரில் ஈடுபடும் ரஷ்ய இராணுவத்தில் இணைந்துள்ள இந்தியர்களை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை அந்த நாட்டு அரசு விரைந்து மேற்கொண்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இரண்டு நாட்கள் அரசு முறை பயணமாக ரஷ்யா சென்றுள்ளார். இந்த நிலையில், ரஷ்ய இராணுவத்தில் உள்ள இந்தியர்கள் தொடர்பில் அந்த நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் மோடி பேச்சுகளை நடத்தியிருந்தார். இதனையடுத்து,

இராணுவப் பணியில் இருந்து விடுவிக்கப்படும் இந்தியர்கள் மீண்டும் தாயகம் திரும்பத் தேவையான அனைத்து நடைமுறைகளையும் ரஷ்யா உறுதி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் உக்ரைனுடனான போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் தரவுகளின்படி சுமார் 30 முதல் 40 இந்தியர்கள் வரையில் ரஷ்ய இராணுவத்தில் பணியாற்றி வருவதாக தெரிய வந்துள்ளது. அவர்கள் நாடு திரும்ப விரும்பினாலும் அது நடக்கவில்லை என்ற தகவல் இதற்கு முன்பு வெளியானது. ஏற்கனவே ரஷ்ய இராணுவப் பணியில் இருந்த இந்தியர்கள் 10 பேர் நாடு திரும்பினர். ஏனையவர்களையும் மீட்க இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கு ரஷ்யாவும் இணக்கம் வெளியிட்டுள்ளது.

(எ)



# தங்கச் சுரங்கத்தில் சிக்கி 12 பேர் பலி; 18 பேர் மாயம்

ஜகார்த்தா, ஜூலை 10

இந்தோனேஷியாவில் உள்ள சுலவேசி தீவில் சட்டவிரோதமாக இயங்கி வந்த தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 12 பேர் உயிரிழந்த சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுலவேசி தீவின் கோரோண்டாலோ பகுதியில் உள்ள போன் பொலாங்கோ என்ற இடத்தில் சட்டவிரோதமாக இயங்கி வந்த தங்கச் சுரங்கத்தில் உள்ள குறுகிய குழியில் உள்ளூர் வாசிகள் 33 பேர் தங்கத்தை தோண்டியெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது திடீரென மண் சரிந்து குழிக்குள் இருந்தவர்கள் மீது விழுந்து அடைத்தது. இந்த விபத்தில் 12 பேர் மண்ணில் புதைந்து உயிரிழந்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்த மீட்புப்படையினர் 12 பேரின் உடல்களை மீட்டனர். இந்த விபத்தில் சிக்கிய மேலும் 18 பேர் மாயமான நிலையில் அவர்களைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. விபத்தில் படுகாயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

(எ)

# என் வாழ்வின் ஒரே இலக்கு என் தேசமும் மக்களும்தான்

## இந்தியப் பிரதமர் மோடி



மொஸ்கோ, ஜூலை 10

என் வாழ்வின் ஒரே இலக்கு என் தேசமும், என் மக்களும் தான் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

உங்கள் முழு வாழ்க்கையையும் உங்கள் நாட்டு மக்களுக்காக அர்ப்பணித்துள்ளீர்கள். இதனை இந்திய மக்கள் நன்கு அறிவார்கள் என்று மோடியை வரவேற்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் குறிப்பிட்டார். இதற்குப் பதிலளித்த மோடி, "நீங்கள் சொல்வது உண்மைதான். எனது ஒரே இலக்கு என் நாடும், நாட்டு மக்களும்தான்" என்று கூறியுள்ளார்.

புடினின் அழைப்பின் பேரில் மோடி 2 நாட்கள் அரசு முறை பயணமாக ரஷ்யா சென்றுள்ளார்.

மொஸ்கோ விமான நிலையத்திலிருந்து ஜனாதிபதி இல்லத்துக்கு அழைத்து செல்லப்பட்ட பிரதமர் மோடியை ஜனாதிபதி புடின் வரவேற்றார். அப்போது, ஒரு நண்பரை அவரது இல்லத்தில் சந்திப்பது என்பது எப்போதுமே மகிழ்ச்சியானது. அப்படிப்பட்ட சுவாரஸ்யமான நிகழ்வை நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்ததற்காக நான் நன்றி கூறிக் கொள்கிறேன். தங்களுடைய இதமான வார்த்தைகளுக்கு நான் நன்றியுரைக்கிறேன்- என்றார் மோடி.

மேலும், இந்தியா மிகப்பெரிய ஜனநாயக நாடு. ஜனநாயகத்தின் தாயகமாக இருக்கிறது. ஆகையால், இந்தியத் தேர்தல் மிகவும் முக்கியமானது. இந்தத் தேர்தலில் 65 கோடி மக்கள் வாக்களித்தனர். கடந்த 60 ஆண்டுகளில் முதன்முறையாக தொடர்ச்சியாக 3 ஆவது முறை ஓர் அரசு ஆட்சியைப் பிடித்துள்ளது. அதற்கு முன்னதாக ஜவஹர்லால் நேரு அச்சாதனையை செய்திருந்தார். 60 ஆண்டுகளுக்குப் பின்னர் எனக்கு அந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்திய மக்கள் என் தாய்நாட்டுக்கு சேவை செய்ய எனக்கு இன்னொரு வாய்ப்பைக் கொடுத்துள்ளனர் என்றும் மோடி குறிப்பிட்டார். (எ)

# உக்ரைனின் பல நகரங்கள் மீது ரஷ்ய படைகள் கடும் தாக்குதல்

## சிறுவர்கள் உட்பட 37 பேர் பலி!



கீவ், ஜூலை 10

உக்ரைனின் தலைநகரில் உள்ள சிறுவர் மருத்துவமனை உட்பட பல நகரங்களின் மீது ரஷ்ய படைகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 37 பேர் பலியாகினர்.

உக்ரைனின் பல நகரங்களை இலக்கு வைத்து வழமைக்கு மாறாக பகல் நேரத் தாக்குதல்கள் இடம்பெற்றன என உக்ரைன் பாதுகாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்போது உக்ரைன் தலைநகரில் உள்ள பிரதான சிறுவர் மருத்துவமனையான ஒக்மாடிட் மீது தாக்குதல் இடம்பெற்றது என உக்ரைன் அதிகாரிகள் கூறினர்.

மருத்துவமனையிலிருந்து புகைமண்டலம் வெளியாவதையும் இடிபாடுகளுக்குள் தேடுதல்கள் இடம்பெறுவதையும் தாக்குதல்கள் இடம்பெற்ற வேளை சிறுவர்களை எவ்வாறு காப்பாற்ற முயன்றனர் என்பதை மருத்துவமனையின் பணியாளர்கள் விபரிப்பதையும் காண்பிக்கும் படங்கள் வெளியாகியுள்ளன.

நான் கடும் அச்சமடைந்தேன். ஆனால், உயிர் தப்பிவிட்டேன். பெரும் சத்தத்தில் ஜன்னல்கள் சிதறின என மருத்துவமனையின் தாதி யொருவர் தெரிவித்தார்.

எச்சரிக்கை சமிக்ஞை ஒலித்ததும் சிறுவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்றோம். முழுவதும் புகை மண்டலமாக காணப்பட்டது. சுவாசிக்க முடியவில்லை. மருத்துவர்கள் குண்டு சிதறல்களால் காயமடைந்தனர். கதவுகளும் ஜன்னல்களும் உடைந்து விழுந்தன.

எனது கைகள் இன்னமும் நடுங்குகின்றன எனவும் கூறினார்.

(எ)

### இரத்தக்கறை படிந்த குற்றவாளி

# புடின் - மோடி சந்திப்பு குறித்து உக்ரைன் ஜனாதிபதி விசனம்

கீவ், ஜூலை 10

உக்ரைனின் சிறுவர் மருத்துவமனை உட்பட பல பகுதிகள் மீது ரஷ்ய படைகள் கொடூரத் தாக்குதல் மேற்கொண்ட தினத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்திப்பதை காண்பது கடும் ஏமாற்றமளித்துள்ளது என உக்ரைன் ஜனாதிபதி வொலெடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர், ரஷ்ய ஜனாதிபதியை சந்தித்த வேளை உக்ரைன் நகரங்களை காலை வேளையில் ரஷ்யாவின் ஏவுகணைகள் தாக்கின.

இந்தத் தாக்குதல்களால் 37 பேர் கொல்லப்பட்டதுடன் 170 பேர் காயமடைந்தனர்.

உக்ரைனின் மீது ரஷ்யா இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் போர் தொடுத்த பின்னர் இந்தியப் பிரதமர் ரஷ்யாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

இரு தலைவர்களும் கட்டித் தழுவுவதையும் தேநீர் அருந்துவதையும் காண்பிக்கும் படங்கள் மற்றும் வீடியோக்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தின் தலைவர் மொஸ்கோவின் இரத்தக்கறை படிந்த குற்றவாளியை இவ்வாறானதொரு நாளில் கட்டித்தழுவுவது கடும் ஏமாற்றத்தை அளிக்கின்றது என ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் தலைநகரில் உள்ள சிறுவர் மருத்துவமனை உட்பட பல நகரங்களின் மீது ரஷ்யா மேற்கொண்ட தாக்குதலில் 37 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் விரைவில் அபிவிருத்தி யுகம் ஆரம்பமாகும்!

## மன்னாரில் கூறினார் சஜித் பிரேமதாஸ



மன்னார், ஜூலை 10

**வடக்கு மாகாணம் இதுவரை மாற்றாந்தாய் கவனிப்பையே பெற்று வந்ததால், இந்த யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்து, இந்த மாகாணத்தின், அபிவிருத்தி யுகத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

பிரபஞ்சம் தகவல் தொழி நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பவற்றை மன்னார் புனித ஜோசப் கல்லூரிக்கு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல மனித உயிர்கள் பலியாகியுள்ளன. யுத்தத்தின் பின்னர் இந்த மாவட்டங்கள் அபிவிருத்தியின் விடியலை காணவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தி, இது வரை எந்த தலைவர்களும் தலைமைத்துவம் வழங்காத சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்த நாம் நடவடிக்கை எடுப்போம்.

இந்த உதவிகளைப் பெற்று, வடக்கு-கிழக்கு இரு மாகாணங்களை மையமாகக் கொண்டு, முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்போம். இன, மதம், சாதி, வர்க்கம், கட்சி வேறுபாடின்றி 41 இலட்சம் பிள்ளைகளினது நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் பாதுகாத்துத் தருவோம் -என்றார்.

(அ)



# தீவைத்து எரிக்கப்பட்ட வாகனம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

ஓட்டுமடம் சந்தியிலுள்ள வீடொன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், வீட்டின் முன்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்துக்கு பெற்றோல் ஊற்றி தீ வைக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இந்த சம்பவம் நடந்தது.

மரக்காலை உரிமையாளர் ஒருவரின் வீடு தாக்கப்பட்டு, வாகனம் தீவைக்கப்பட்டுள்ளது. இவரது மகன் முன்னர் குழு ஒன்றுடன் சேர்ந்தியங்கியவர் எனவும், தற்போது பிரான்சில் தஞ்சமடைந்துள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ)

# சீரற்ற வானிலை காரணமாக ஆறுகளின் நீர்மட்டம் உயர்வு!

கொழும்பு, ஜூலை 10

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஆறுகள் சிலவற்றின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன் நாட்டின் சில பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக களு கங்கை, நில்வள கங்கை, அத்தனகல்லு ஓயா ஆகியவற்றின் நீர்மட்டம் அதிகரித்துள்ளமையினால் குறித்த ஆறுகளை அண்மித்துள்ள தாழ் நிலப்பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மாகுறு கங்கை, குடா கங்கை, பணாதுகம ஆகியவற்றை அண்மித்துள்ள தாழ்நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்களும் அவதானத்துடன் செயற்படுமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, நாட்டின் நிலப் பகுதிகளில் தொடர்ச்சியாக நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக மரங்கள் முறிந்து விழும் அபாயம் காணப்படுவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(அ)

# பூஸா சிறைச்சாலைக்குள் திடீர் சோதனை நடவடிக்கை

## கைத்தொலைபேசிகள் உட்பட பல பொருட்கள் மீட்பு

கொழும்பு, ஜூலை 09

பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது கையடக்கத் தொலைபேசிகள் உட்பட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் பூஸா சிறைச்சாலையின் வைத்தியசாலை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சிமெந்து மற்றும் தலையணைகளில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசிகள் உட்பட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காக சிறைச்சாலை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

(அ)

# நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் தேர்தல்களுக்கு முன் பாராளுமன்றில்

கொழும்பு, ஜூலை 10

உத்தேச உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்தை எதிர்வரும் ஒகஸ்ட் - செப்ரெம்பர் மாதமளவில், தேர்தல்களுக்கு முன்பதாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகம் உத்தேசித்திருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

நாட்டில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிக்கும் பணிகள் அரசாங்கத்தினால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் விதமாக கலாநிதி அசங்க குணவன்ச தலைமையில் இயங்கிவரும் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலக அதிகாரிகள் கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு உள்ளடங்கலாக நாட்டின் பல்வேறு பாகங்களுக்கும் விஜயம் மேற்கொண்டு பலதரப்பட்ட சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.

அதுமாத்திரமன்றி தெற்கில், குறிப்பாக கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகளை சந்தித்து உத்தேச உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி அசங்க குணவன்ச, அதன் கொள்கைப்பிரிவுத் தலைவர் யுவி தங்கராஜா ஆகியோர் தலைமையிலான குழுவினர் கடந்த ஜூன் மாதம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அநுராதபுரம், புத்தளம், மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கும், இம்மாதம் 2 - 5 ஆம் திகதிகளில் பொலனறுவை மாவட்டத்துக்கும் களவிஜயங்களை மேற்கொண்டிருந்தனர்.

இவ்விஜயத்தின்போது மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் பிராந்தியக்கிளை, அரச சார்பற்ற அமைப்புக்கள், மக்கள் பேரவை போன்ற கட்டமைப்புக்களின் அதிகாரிகள், பிரதிநிதிகளுடனும், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், போர் விதவைகள், முன்னாள் போராளிகள் உள்ளடங்கலாகப் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டோருடனும் தனித்தனியாக சந்திப்புக்கள் நடைபெற்றன.

இச்சந்திப்புக்களின்போது போரினால் பாதிக்கப்பட்டோர் முகங்கொடுத்துவரும் பிரச்சனைகள், அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வு, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் அவர்களது நிலைப்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதுமாத்திரமன்றி இந்த உத்தேச ஆணைக்குழு தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுவருவதாக இடைக்கால செயலகம் தெரிவித்துள்ளது.

மேலும், சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரதும் ஆலோசனைகளைப்பெற்று இடைக்கால செயலகத்தினால் தயாரிக்கப்பட்டுவரும் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டவரைபை பெரும்பாலும் எதிர்வரும் ஒகஸ்ட் - செப்ரெம்பர் மாதமளவில், தேர்தல்களுக்கு முன்பதாக இயலுமானவரை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இடைக்கால செயலகம் உத்தேசித்திருப்பதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

(அ)

# முகத்தில் இரத்த காயங்களுடன் 16 வயது சிறுமி சடலமாக மீட்பு

கொழும்பு, ஜூலை 10

முகத்தில் இரத்தக் காயங்களுடன் மர்மமான முறையில் உயிரிழந்த 16 வயது சிறுமியின் சடலம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நிவித்திகலை, வட்டாபொத, யொஹூன் கிராமத்தில் உள்ள இறப்பர் தோட்டத்திற்கு அருகில் உள்ள ஒத்தையடி பாதையில் இருந்து நேற்று முன் தினம் நிவித்திகல பொலிஸார் சடலத்தை கண்டுபிடித்தனர்.

16 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ள நிலையில் இவர் வட்டாபொத, யொஹூன் கிராமம் பகுதியில் வசித்து வந்துள்ளார்.

இறந்தவரின் தாயார் வட்டாபொத விகாரைக்கு அருகில் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார். சம்பவத்தன்று சிறுமி பாடசாலைக்குச் செல்லாததால் வீட்டில் தனியாக இருந்துள்ளார்.

இதனையடுத்து குறித்த சிறுமியை விற்பனை நிலையத்திற்கு வருமாறு தாய் தொலைபேசி மூலம் அழைத்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விற்பனை நிலையத்திற்கு வருவதில் தாமதம் ஏற்பட்டதால், தாய் வீட்டுக்கு ஒற்றையடி பாதை வழியாகச் சென்றபோது, மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் சிறுமியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்து நடந்து சென்று கொண்டிருந்தபோது, இறப்பர் மரத்தில் வெட்டப்பட்ட இறப்பர் மரத்தின் கிளை சிறுமியின் மீது விழுந்ததில் இந்த மரணம் ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிவித்திகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லிபுர...

கணபதிசாமி குருக்கள் சுதர்சனக் குருக்கள் தனது 76ஆவது வயதில் நேற்று செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

இவர், கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் பிரதம குருவாக இறை பணியாற்றியுள்ளார்.

துன்னாலை மத்தி, கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஆவரங்கால் சிவன்கோயிலடியை வதிவிடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-02)

## பொறுப்பற்ற...

கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட குறித்த விடயத்தினை அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

குறித்த கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாவது-

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வைத்திய அத்தியட்சகராக கடந்த ஜூன் மாதம் நியமிக்கப்பட்ட வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன், அங்கு நிலவி வந்த நிர்வாக சீர்கேடுகளையும் குறைபாடுகளையும் அடையாளம் கண்டு அவற்றை சீர்செய்வதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

அதனடிப்படையில், பெண் நோயியல் பிரிவு, சந்திர சிகிச்சை பிரிவு, ஐ.சி.யு. பிரிவு ஆகியவற்றை செயற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட 3 மாடிக் கட்டிடம் கடந்த 14 வருடங்களாக பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், நன்கொடையாளரினால் வழங்கப்பட்ட 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான சத்திர சிகிச்சை உபகரணங்களும் பயன்படுத்தப்படாமல் இருந்த நிலையில், அவற்றை செயற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட வைத்திய அத்தியட்சகர், முதற் கட்டமாக ஐ.சி.யு. மற்றும் மகப்பேற்று பிரிவு ஆகியவற்றை செயற்படுத்தியுள்ளார்.

மேலும், சந்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய நோயாளர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில் சத்திர சிகிச்சை பிரிவை இயக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அதேபோன்று, குறித்த வைத்தியசாலையில் உயிரிழப்பவர்களின் உடல்கள், உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில், அதனை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மேற்கொண்டு, பொது மக்களுக்கு ஏற்பட்டு வந்த தேவையற்ற அசௌகரியங்களை தடுப்பதற்கும் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனாவினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், மருந்துப் பொருட்கள் உரிய களஞ்சியப்படுத்தல் ஏற்பாடுகள் இன்றி, தரையில் போடப்பட்டிருந்ததுடன், குறித்த வைத்தியசாலையில் 22 வைத்தியர்கள் கடமையாற்றி வந்ததுடன், அவர்களுள் பெரும்பாலானவர்கள், மாதத்தில் 10 நாட்கள் மாத்திரமே வைத்தியசாலையில் கடமையாற்றியுள்ளனர்.

இவ்வாறான பல்வேறு சீர்கேடுகள் மற்றும் குறைபாடுகளை தீர்ப்பதற்கு வைத்திய அத்தியட்சகர் முன்னெடுத்த முயற்சிகளை விரும்பாத சக்திகள், அங்கு தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளன.

இவை அனைத்தையும் அறிந்து கொண்ட பொது மக்கள் பெரிய போராட்டம் ஒன்றினையும் முன்னெடுத்தனர்.

எனவே, குறித்த விவகாரம் தொடர்பில் உயர்மட்ட குழு அமைக்கப்பட்டு நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட அனைவரும் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட வேண்டும்- என்றார். (அ)

## நாட்டை...

சவால்களை ஏற்று நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் தரப்பின் பக்கமே மக்கள் நிற்க வேண்டும். கடல் அமைதியாக இருக்கும்போது அல்ல, புயல் ஏற்படும்போதுதான் மாலுமியின் உண்மையான திறமையை அறியமுடியும்-என்றார். (அ)

## அரச சேவைகள்...

அரச தொழில் அதிகாரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய சேவை, உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளிட்டவற்றுக்கு உட்பட்ட தொழிற்சங்கங்கள் தொழில்நுட்ப சேவைக்கு உட்பட்ட திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளுக்கு உட்பட்ட தொழிற்சங்கங்கள் இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டன.

ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கக் கூட்டமைப்பும் சுகயீன விடுமுறையை அறிவித்து நேற்று தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டது.

ஆசிரியர், அதிபர் வேதன முரண்பாடு உள்ளிட்ட உழைக்கும் மக்களின் ஊதிய பிரச்னைகளுக்கான நியாயமான தீர்வை வழங்குமாறு கோரி இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதேவேளை, ஆசிரியர், அதிபர்கள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு முன்னெடுக்கும் சுகயீன விடுமுறை போராட்டத்துக்கு ஆதரவளிப்பதாக இலங்கை கல்வி சமூக சம்மேளனத்தின் தலைவர் ஆர். சங்கர மணிவண்ணன் தெரிவித்தார்.

நேற்றைய இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் அஞ்சல் தொழிற்சங்கமும் ஈடுபட்டது.

நாடளாவிய ரீதியாகவுள்ள அஞ்சல், உப அஞ்சலகங்களைச் சேர்ந்த 20 ஆயிரம் சேவையாளர்கள் இந்த பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக அஞ்சல் அலுவலகங்களின் செயல்பாடுகள் மற்றும் அஞ்சல் விநியோகம் என்பன பாதிக்கப்பட்டன.

இதுதவிர, மத்திய அஞ்சல் பரிமாற்ற பணிகள் முற்றாக ஸ்தம்பித்தன.

இதனால் அஞ்சல் திணைக்களத்துக்கு 140 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அஞ்சல் மா அதிபர் பீ.சத்குமார தெரிவித்தார். (அ)

## செல்வம் எம். பியை கூட்டமைப்பின்...

தமிழரசுக் கட்சிக்கும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணிக்கும் (புளொட்) ரெலோவின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) எம்.பி. கடிதம் அனுப்பியுள்ளார்.

இதேவேளை, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனை கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு தலைவராக தெரிவு செய்வதற்கு தான் பிரேரிப்பதாக புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அறிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோருக்கு ரெலோவின் செயலாளர் நாயகம் தனித்தனியே கடிதங்களை நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"முதலாவதாக மறைந்த இரா.சம்பந்தன் ஐயாவுக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு, கடந்த 23 வருடங்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவராக எங்கள் எல்லோராலும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு இரா.சம்பந்தன் ஐயா செயற்பட்டு வந்தார். தற்போது அவரது மறைவுக்குப் பின்பு புதிதாக பாராளுமன்றக் குழுத் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுள் கடந்த காலங்களில் பல உள்வீட்டுப் பிரச்னைகள், மனவேதனைகள் வந்தபோதும் நாங்கள் பாராளுமன்றத்தினுள் எமது மக்களின் தேவை, நன்மை கருதி ஒற்றுமையாகத்தான் செயற்பட்டு வந்தோம். அந்த அடிப்படையில் தொடர்ந்தும் ஒற்றுமையாக பாராளுமன்றத்தினுள் செயல்பட விரும்புகின்றோம்.

எனவே, ஏற்பட்டுளள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவருக்கான வெற்றிடத்தை எல்லோருடைய சம்மதத்துடனும் நிரப்புவதற்கு விரும்புகின்றோம்.

பாராளுமன்ற சிரேஷ்ட தன்மை மற்றும் நீண்ட காலமாக, தொடர்ச்சியாக பாராளுமன்றத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாவதற்கு முன்பிருந்தே, 26 வருடங்களுக்கு மேலாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராகத் தெரிவு செய்வதற்கு உங்களுடைய ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்." - என்றுள்ளது. (அ)

## தேர்தலில் வெல்ல முடியாதோர்...

சந்திப்பிலேயே பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவரத்தன இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன-

சுதந்திரத்துக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் நாட்டுக்காக அதிகபட்ச பணிகளைச் செய்தது என்பதை நாம் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், பலவீனங்களும் இருந்தன.
எவ்வாறாயினும், சுதந்திரத்தின் பின்னர் தொடர்ச்சியாக இருந்த ஆட்சியின் பலவீனங்களைத் தீர்க்க ஜனாதிபதி ரணில் நடவடிக்கை எடுத்துள்ளார்.

உதாரணமாக, அரசியலமைப்பின் 27 மற்றும் 28 ஆவது பிரிவுகளில் அரச கொள்கையை வழிநடத்தும் கோட்பாடுகள் மற்றும் அடிப்படைக் கடமைகள் என்பன குறிப்பிடுகின்றன. இது பொதுமக்களுக்கு எப்படி உரிமைகளை வழங்குவது என்பது பற்றியது.

எவ்வாறாயினும், 27 மற்றும் 28 இல் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், 29 ஆவது பிரிவில் எந்தப் பொறுப்புக் கூறலும் ஏற்படாமலும் ஜனநாயக அரசியலைப் பாதுகாக்க சட்டத்தால் எந்த உரிமைகளும் ஒதுக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி, எந்த நீதிமன்றமோ அல்லது நீதிபதியோ, அரசியல்வாதிகளினால் கூறப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்பில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது,

இந்த நிலைமையில்தான் நாட்டின் அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி நாட்டை காலாகாலமாக வீழ்ச்சியடையச் செய்து வருகின்றன.

இந்நிலையை மாற்றியமைக்க வேண்டியதன் காரணமாக தற்போதைய ஜனாதிபதி, அரசியலமைப்பின் 27, 28 மற்றும் 29 ஆகிய பிரிவுகளை பொறுப்புக் கூறக்கூடிய வகையில் பொருளாதார மாற்ற சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். 165 பக்கங்களைக் கொண்ட இந்த சட்ட மூலம் இரண்டு கோடி மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 148, 149, 150, 151, 152 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொதுமக்களால் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினரின் முக்கிய பொறுப்பு அரச நிதி தொடர்பான பொறுப்பாகும்.

அரசியல் கட்சிகள் அவ்வப்போது வெளியிடும் பொய்யான அறிக்கைகளால் அந்த நிதிப் பொறுப்பு வலுவிழக்கிறது. அந்த நிலையைத் தடுக்கும் வகையில், அரசியல் கட்சிகள் கூறுகின்ற விடயங்களின் உண்மை நிலையை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக வரவு செலவுத்திட்ட அலுவலக சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அத்துடன் நின்றுவிடாமல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசியலமைப்பில் உள்ள அந்தப் பிரிவை பலப்படுத்தும் வகையில் பொருளாதார பரிமாற்ற சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதன்படி அரசியல் கட்சிகளின் பொய்களைக் கூறும் சகாப்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்-என்றார். (அ)

## சாவகச்சேரி...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

யாழில் கடந்த சில நாட்களாக பதற்றமான சூழல் ஒன்று நிலவி வருகின்றது. குறிப்பாக யாழில் நேற்றைய தினம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 1000 இற்கும் மேற்பட்ட மக்கள் வீதியை மறித்து பாரிய போராட்டமொன்றினை முன்னெடுத்திருந்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சாவகச்சேரி வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர், வைத்தியசாலையில் இடம்பெற்று வரும் ஊழல்கள் மற்றும் பிரச்னைகள் தொடர்பாக பல விடங்களை அம்பலப்படுத்தியிருந்தார்.

அவர் தெரிவித்த கருத்துகள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையிலேயே பொதுமக்களால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதுபொதுமக்கள், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்திய சேவைகள் முறையாக முன்னெடுக்கப்படுவதில்லை எனவும் அங்கு பல்வேறு ஊழல்கள் இடம்பெற்று வருவதாகவும், குற்றம் சுமத்தியிருந்தனர்.

அத்துடன் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குச் செல்கின்ற பெரும்பாலான நோயாளர்கள் அநாவசியமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும், இரவு வேளைகளில் வைத்தியர்கள் வைத்தியசாலையில் இருப்பதில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதேவேளை குறித்த வைத்தியசாலையில் 10 வருடங்களுக்கு முன்னர் விபத்து சத்திரசிகிச்சை அலகு நிர்மாணிக்கப்பட்டபோதும் அதற்கான பணியாளர்கள் தெரிவு செய்யப்படவில்லை எனவும், தென்மராட்சி அபிவிருத்தி ஒன்றியம், புலம்பெயர்ந்த தமிழ் மக்களுடைய நிதிப் பங்களிப்புடன் 17 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் வைத்தயசாலைக்கு கையளிக்கப்பட்டபோதும அவை பயன்படுத்தப்படாமல் பழுதடையக்கூடிய நிலையில் இருப்பதாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே இது குறித்து உடனடியாக சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்து சாவகச்சேரி வைத்தியசாலையை சிறந்த வைத்தியசாலையாக மாற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன்ட்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மின் கட்டணம் ஜூலை 18 முதல் 30 வீதத்துக்கும் மேல் குறையும்!

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர தகவல்

கொழும்பு, ஜூலை 10

**"மின்சாரக் கட்டணம் 30 வீதத்துக்கும் அதிகமாக குறைக்கப்படும்" என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.**

அதன்படி, எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் இந்த விலை குறைப்பு நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

அதேநேரம், 2024 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் உத்தேச மின் கட்டணத் திருத்தம் தொடர்பான மக்களின் வாய்மூல கருத்துக் கோரல்கள் நேற்று காலை முதல் இடம்பெற்றன.

நேற்று காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த இந்தக் கருத்துக் கோரல் செயற்பாடு, மாலை 4.30 வரை பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.




இது தொடர்பான எழுத்து மூலக் கருத்துக் கோரல்கள் நிறைவடைந்துள்ளதாகவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# அத்துருகிரிய துப்பாக்கிச்சூடு; ஐவரிடம் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, ஜூலை 10

அத்துருகிரியவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் ஐவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"க்ளப் வசந்த" எனப்படும் நபர் திறந்து வைப்பதற்காக வருகை தந்திருந்த நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தந்திருந்தவர்களிடம் இவ்வாறு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, சம்பவம் இடம்பெற்ற இடத்தை அண்மித்துள்ள பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கமெரா காணொளிகளை ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பான விசாரணைகளில் 10 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அத்துருகிரிய நகரில் நேற்று முன் தினம் காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தப்பிச்செல்ல பயன்படுத்தியதாகக் கருதப்படும் வான் புளத்சிங்ஹள - தெல்மாஎல்ல பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

துப்பாக்கிதாரிகள் வந்ததாகக் கூறப்படும் கார், நவகமுவ - கொரத்தொட்ட பகுதியில் நேற்று முன் தினம் பகல் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் பிரபல வர்த்தகரான "கிளப் வசந்த" எனப்படும் சுரேந்திர வசந்த உள்ளிட்ட இருவர் உயிரிழந்தனர்.

இதனிடையே, இலங்கையின் பிரபல பாடகி கே.சுஜீவா மற்றும் க்ளப் வசந்தவின் மனைவி உள்ளிட்ட நால்வர் காயமடைந்தனர். (அ)

# இந்தியா, சீனாவை கையாள்வதில் எந்த வேறுபாடுகளுமே கிடையாது!

## ரொய்ட்டர் மாநாட்டில் அலி சப்ரி

கொழும்பு, ஜூலை 10

இலங்கையின் கடன்மறுசீரமைப்பு தொடர்பாக சர்வதேச பிணைமுறிபத்திர உரிமையாளர்களுடன் முன்னெடுத்துள்ள பேச்சுவார்த்தைகளை அடுத்த சில வாரங்களில் இலங்கை பூர்த்தி செய்யும் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அயல் நாடுகளான இந்தியா, சீனாவை கையாளும் விதத்தில் எந்த வேறுபாடுகளும் இல்லை என்பதை உறுதி செய்வதற்காக இலங்கை தனது உறவுகளை சமநிலைப்படுத்த முயல்கின்றது என அவர் கூறினார்.

ஆசியாவில் தங்களுக்குள் போட்டியிடும் இரு பெரும் நாடுகளும் இலங்கைக்கு அதிகளவு கடன்களை வழங்கியுள்ளதுடன் முக்கிய முதலீட்டாளர்களாக காணப்படுகின்ற நிலையில், இலங்கையில் புவிசார் அரசியல் ஆதிக்கம் செலுத்துவதற்காக போட்டியிடுகின்ற சூழ்நிலையிலேயே, இலங்கையின் வெளிவிவகார அமைச்சரின் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

சிங்கப்பூரில் இடம்பெறும் ரொய்ட்டர்ஸ் நெக்ஸ்ட் மாநாட்டில் இலங்கைக்கு கடன் வழங்கியவர்களுடனான மறுசீரமைப்பு முயற்சிகள் எப்போதும் முடிவடையும் என்ற கேள்விக்கு அடுத்த சில வாரங்களில் என எதிர்பார்க்கின்றோம் என அலி சப்ரி பதிலளித்தார்.

இந்த மாத இறுதியில் நாங்கள் உத்தியோகபூர்வமாக கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்துவிடுவோம் என தெரிவித்துள்ள அவர், அதன் பின்னர் அதனடிப்படையில் நாங்கள் பணம் செலுத்த ஆரம்பிக்க வேண்டும் என குறிப்பிட்டார். (அ)



# ஐக்கிய தேசியக் கட்சியினரின் தேர்தல் பதாதைகளுக்கு சேதம்

கொழும்பு, ஜூலை 10

தேர்தல் திகதி விரைவில் அறிவிக்கப்படவுள்ள நிலையில், பிரசார நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனோடு சேர்ந்து வன்முறைகள், சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தும் நிலைமையையும் அவதானிக்க முடிகிறது.

தம்புள்ளை மாநகர சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி அலுவலகத்திற்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த பதாகைகளுக்கு தம்புள்ளை சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் கட்சி உறுப்பினர்கள் தலைமையில் நேற்று காலை குறித்த அலுவலகம் திறக்கப்படவிருந்ததாக தம்புள்ளை தொகுதி அமைப்பாளர் பிரியன் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தம்புள்ளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# யாழில் போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைதான பெண் நீதிமன்றிலிருந்து தப்பிச் சென்ற நிலையில் மீண்டும் கைது!

கொழும்பு, ஜூலை 10

போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான பெண் நீதிமன்றிலிருந்து தப்பிச் சென்ற நிலையில் மீளக் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் அழைத்துச் சென்றனர்.

நீதிமன்றில் தான் மலசலக் கூடம் செல்லவேண்டும் கேட்டதற்கு பொலிஸார் இணங்க, நீதிமன்ற வளாகத்தில் உள்ள மலசல கூடத்திற்கு அழைத்துச் சென்ற நிலையில் மலசல கூடத்தினுள் சென்ற பெண் உள்பக்கத்தால் மலசலக் கூட கதவை மூடிவிட்டு மலசல கூட்டத்தின் மேற்பகுதியிலிருந்த சிறிய ஜன்னல் ஊடாக தப்பிச் சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் உள்ளே சென்ற பெண் வராததால் சந்தேகம் அடைந்த பொலிஸார் பெண்ணை அழைத்தும் உள்ளே இருந்து பதில் வராததால் கதவினை உடைத்துப் பார்த்தபோதே, பெண் தப்பி சென்றமை தெரியவந்துள்ளது.

தப்பிச் சென்ற பெண்ணை கைது செய்வதற்கு பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்தவேளை, போதைப்பொருள் வியாபாரம் நடைபெறும் இடம் எனச் சந்தேகிக்கப்படும் இடத்தை பொலிஸார் கண்காணித்த வேளை, காலையில் நீதிமன்ற வளாகத்திலிருந்து தப்பிச் சென்ற பெண், அங்கு நடமாடியபோது மீண்டும் கைது செய்யப்பட்டார்.

அதனை அடுத்து கைது செய்யப்பட்ட பெண் மன்றில் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதையடுத்து 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. (அ)

# ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு இம்மாத இறுதியில் வெளியாகும்

கொழும்பு, ஜூலை 10

ஜனாதிபதி தேர்தல் குறித்த அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு ஜூலை மாதம் இறுதியில் வெளியிடும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜூலை மாத இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியானால் செப்ரெம்பர் 17 ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் தேர்தல்களை நடத்தலாம் என அவர் கூறினார்.

16 முதல் 21நாட்களுக்குள் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என தெரிவித்த அவர், அதன் பின்னர் தேர்தல் வாக்களிப்பு நான்கு வாரங்களுக்கு பின்னரும் ஆறு வாரங்களுக்கு முன்னதாகவும் இடம்பெறும் எனவும் தெரிவித்தார்.

தேர்தல்களுக்கு தயாராவதற்காக தேர்தல் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபரை சந்திக்கவுள்ளது என தெரிவித்துள்ள தேர்தல் ஆணையாளர், அரசாங்க அச்சகத்தின் அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளதாக கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org